... பக்கங்கள் பனிரண்டு
விலை ரூபா 5-00

# வலம்புரி
VALAMPURI

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 தை 22 ஞாயிற்றுக்கிழமை (4-02-2001) தொலைபேசி: 3378 ஒலி: 47

அழகிய தங்க நகைகளை
உங்கள் எண்ணம்போல்
தெரிவுசெய்திட
**அர்ச்சனா**
**ஜுவலரிஸ்**
176/1, நாவலர் வீதி,
118, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(கி-1931)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் பிரிவு

## அரசு - புலிகளுடனான பேச்சுவார்த்தையில் எரிக்சோல் ஹெய்மின் முதற்கட்டப்பணி வெற்றி

(கொழும்பு)
அரசுக்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையே மோதல் தவிர்ப்பை ஏற்படுத்தி பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கு நோர்வே அரசு முன்வைத்துள்ள புரிந்துணர்வு இணக்கப்பாட்டு யோசனைகளை இருசாராரும் ஓரளவுக்கு ஒத்துக் கொள்ள வைப்பதற்கான பணியில் முன்னேற்றம் கண்டதையடுத்து தூதுவர் எரிக்சோல் ஹெய்ம் நேற்றிரவு நோர்வேக்குத் திரும்பியுள்ளார். அரசுக்கும் - விடுதலைப் புலிகளுக்கிடையே புரிந்துணர்வு அடிப்படையில் சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கும் பணியில் நான்காவது தடவையாக கொழும்பு வந்திருந்த தூதுவர் எரிக்சோல் தனது பணியை வெற்றிகரமாகமுடித்துக் கொண்டு, நாடுதிரும்பியுள்ளார் நாடு திரும்பியுள்ள தூதுவர், சமாதான ஒப்பந்த மொன்றில் கைச்சாத்திடும் அடுத்த கட்ட நடவடிக்கை (12ம் பக்கம் பார்க்க)

## ★ நோர்வேயின் சமாதான முயற்சி
# பாலசிங்கம் - அமைச்சர் கதிர்காமர் ஒஸ்லோவில் சந்திக்க ஏற்பாடு!

### தூதரக வட்டாரங்கள் தகவல்

(அரசியல் நிருபர்)

**இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் லஷ்மன் கதிர்காமரும் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கமும் மிக விரைவில் நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் சந்தித்துப் பேசவுள்ளனர் என நம்பகமாக தெரிய வந்துள்ளது.**

கடந்த புதன்கிழமை நான்காவதுதடவையாககொழும்பு வந்திருந்த நோர்வேயின் தூதுவர் எரிக்சோல்ஹெய்ம் அரசையும், விடுதலைப்புலிகளையும் பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டுவருவதில் ஓரளவு வெற்றிகண்டு நாடுதிரும்பியிருக்கும் இவ்வேளையில். அமைச்சர் கதிர்காமரும், அன்ரன்பாலசிங்கமும் ஒஸ்லோவில் சந்தித்துப்பேசும் முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு விரைவில் இடம்பெறுமென இராஜதந்திரவட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நோர்வேயின் தூதுவரின் சமாதானமுயற்சி ஓரளவுக்கு வெற்றி அளித்திருக்கும் இச்சந்தர்ப்பத்தில் தொடர்ந்து அரசும்-விடுதலைப் புலிகளும் சமாதானப் பேச்சுவார்த்தையில்கலந்துகொள்வதுதொடர்பாகவும், ஆரம்பகட்டப் பேச்சுவார்த்தைக்கான நகல்திட்டவரைவு ஒன்றைத் தயாரிப்பது தொடர்பாகவும் அதில் என்ன என்ன விடயங்கள், உள்ளடக்கப்படவேண்டுமெனவும் இச்சந்திப்பின் போது இருசாராரும் ஆராய (12-ம் பக்கம் பார்க்க)

### நோர்வேயின்சமாதானத்தீர்வை
## இருசாராரும் ஏற்காது போனால்

## பாராளுமன்றத்தின் முன் சுதந்திர தின நிகழ்வு

(கொழும்பு)
இலங்கையின் 53 ஆவது சுதந்திரதினமான இன்று பாராளுமன்றக் கட்டடத்திற்கு முன்பாக கோலாகலமாக கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தலைமையில் நடைபெறவுள்ள இவ் வைபவத்தில் இராஜதந்திரிகள, தூதுவர்கள் உட்படசுமார் ஆயிரம் பேர் வரை அழைக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி சந்திரிகா இன்று காலை தேசியக் கொடியை ஏற்றிவைத்து முப்படைகளினதும் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொள்வார்.

இதனை அடுத்து காலை 8.55 மணிக்கு நாட்டு மக்களுக்கு வானொலி, தொலைக்காட்சிமூலம் மும்மொழிகளிலும் உரையாற்றுவார்.
(ம)

## சுதந்திரதினவைபவம்
### தமிழ்க்கட்சிகளுக்கு அழைப்பில்லை

(கொழும்பு)
இன்று நடைபெறவுள்ள 53வது சுதந்திரதினக் கொண்டாட்டங்களில் கலந்துகொள்வதற்கு அரசு சார்பு தமிழ்க் ... ளன.

தமிழர் விடுதலைக் கூட்டணி, அகில இலங்கைதமிழ்க் காங்கிரஸ், ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ்.சுரேஸ்அணி

# இருசாராரும் ஏற்காது போனால் பாரியவிளைவுகளைசந்திக்க நேரிடும்

(கொழும்பு)

அரசும் விடுதலைப் புலிகளும் சமாதானப் பேச்சுக்களில் ஈடுபடுவதற்கு ஏற்ற வகையில் நோர்வேத் தூதுவர் எடுத்துவரும் புரிந்துணர்வு இணக்கப்பாட்டு யோசனைகளை ஏற்று இருசாராரும் உடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உப தலைவரும், யாழ். மாவட்ட எம்பியுமான வீ. ஆனந்தசங்கரி

(12-ம் பக்கம் பரர்க்க)

## புலிகளை உடனடியாக தடைசெய்ய

# சிஹலஉறுமயவின் செயலாளர் பிரிட்டிஷ் அமைச்சருக்குக்கடிதம்

[கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை பிரித்தானிய அரசாங்கம் தடைசெய்ய வேண்டுமென்று கோரி, பிரித்தானிய உள்துறை அமைச்சின் செயலாளர் ஜக்ஸ்ரோவுக்கு சிஹல உறுமயக் கட்சியின் செயலர் திலக்கருணாரட்ண கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளார்.

புலிகள் அமைப்பு பயங்கரவாத அமைப்பு என்பதை வலியுறுத்தி, எழுதப்பட்ட அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

விடுதலைப்புலிகள் அமைப்பை பிரித்தானிய அரசாங்கம் தடைசெய்ய வேண்டும் இல்லையேல் புலிகள் மனிதகுலத்துக்கு எதிராக செய்துவரும் கொடூரங்களை பிரித்தானிய அங்கீகரிப்பதாக அமையும்.

இலங்கையிலிருந்து இடம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் தமிழர்களிடம் புலிகள் நிதிசேகரிக்கவும் மற்றும் ஆயுதங்களை கொள்வனவு செய்யும் நடவடிக்கையில் ஈடுபடவும் பிரித்தானியாவை தளமாகப் பயன்படுத்துகிறார்கள்.

வடக்கு கிழக்கு பகுதிகளில் வாழ்ந்த 90 ஆயிரம் சிங்கள மக்களையும் 80 ஆயிரம் முஸ்லிம்களையும் குடியிருக்க விடாது விரட்டியவர்கள் என அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ]

53வது சுதந்திரதினக் கொண்டாட்டங்களில் கலந்துகொள்வதற்கு அரசு சார்பு தமிழ்க் கட்சி தவிர்ந்த ஏனைய தமிழ் கட்சிகள் எவருக்கும் இதுவரை அழைப்பு விடுக்கப்படயில்லை என தமிழ்க்கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள் ...டணி, அகில இலங்கைதமிழ்க் காங்கிரஸ், ரெலோ புளொட், ஈ.பிஆர்.எல்.எவ்சுரேஸ்அணி உட்பட மற்றும் பல தமிழ்க் கட்சிகளுக்கும் சுதந்திரதினக் கொண்டாட்டங்களுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை எனத்தெரிவிக்கப் படுகிறது.

# அனுருத்த-டி.எம் ஜயரத்ன முறுகல் நிலை வலுக்கிறது!

(கொழும்பு)

எரிபொருள் மின்சக்தி அமைச்சரும், பிரதிப் பாதுகாப்பு அமைச்சருமான ஜெனரல் அனுருத்த ரத்வத்தவுக்கும் காணி விவசாய அமைச்சரும் பொது ஜன ஐக்கிய முன்னணியின் செயலாளருமான டி. எம். ஜயரத்னவுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள முறுகல் நிலை வலுவடைந்து ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமளவிற்கு விரிவடைந்துள்ளது.

கண்டியில் நடந்த அனுருத்த நடத்திய செய்தியாளர் மாநாட்டில் பொது அமைச்சர் ஜயரத்ன மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப் போவதாக அறிவித்துள்ளார்.

சமாதான அமைப்பில் இடம் பெற்றுள்ள 15 உறுப்பினர்களில் 11 பேர் கலந்து கொண்டு ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கும் தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளதாக

(12-ம் பக்கம் பார்க்க)

# இன்று துக்கதினம் அனுஷ்டிக்க யாழ். பல்கலை மாணவர்கள் முடிவு

(யாழ்ப்பாணம்)

இன்று நடைபெறவுள்ள சுதந்திர தினக் கொண்டாட்டத்தைமுன்னிட்டுயாழ் பல்கலைக்கழக மாணவர்கள் கறுப்புப் பட்டி மற்றும் கறுப்புக் கொடி என்பனவற்றை வழங்கி சுதந்திர தினத்தை துக்கநாளாக அனுஷ்டிக்க போவதாக அறிவித்துள்ளனர்

இதனை ஒட்டி யாழ் பல் ''கலைக்கழக வளாகத்தில் தமிழ்த்தேசிய இனம் சிங்கள பேரினவாதிகளினால் அடிமை

(12-ம் பக்கம் பார்க்க)

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

## சிறு விளம்பரம்

### செவ்வாய்மாற்றம்

07 2-2001 செவ்வாய்மாற்றம், 11-4-2001 வக்கிரச் சனி மாற்றம் ரூ 10/ எங்கும் விற்பனையாகின்றன. (எல்லாராசிப்பலன்களும் அடங்கியவை.) கணிப்பாசிரியர்: சத்யா, 3-ம் மைல், ஆனைக்கோட்டை.

[2486]

### இணைப்பாளர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில்இராணுவநடவடிக்கைகாரணமாகக்காணாமற் போன செல்லம்மா சுபாஸ்கரன், முருகன் சிவராஜா, வைரமுத்து முத்துலிங்கம், கணேஸ் ரமணன் ஆகியோரின் ஆள் கொணர்வு மனுத்தாக்கல் விடயமாக வட்டு தெற்கு வட்டுக்கோட்டையைச் சேர்ந்த கே. செல்லம்மா மறுவன்புலோ சாவச்சேரியைச் சேர்ந்த எஸ் முருகன், கொழும்புத்துறையைச் சேர்ந்தகவி மகாலிங்கம் ஐங்கரன் வீதி, சுதுமலை வடக்கு மானிப்பாயைச் சேர்ந்த கணேஸ் ஆகியோரை மனித கௌரவத்திற்கான மன்றம் யாழ்ப்பாணம் மணியம்கட்டடத்தில் இயங்கும் காரியாலயத்தில் சந்திக்குமாறு அதன் இணைப்பாளர் ஐ. சிவராஜ் கேட்டுள்ளார்.

### புலிகள் தரப்பில் உயிரிழந்தோர்

(வவுனியா)

கடந்த 24ம் திகதி மட்டக்களப்பு மாவட்டம் மங்கிக்கட்டு பகுதியில் படையினர் மேற்கொண்ட தாக்குதலில்

- திவகுலன் (அருணாசலம் சந்திரகுமார்) மட்டக்களப்பு மாவட்டம் என்றபோராளியும், 1998ம் ஆண்டு 9ம் மாதம் 29ம் திகதி மாங்குளம் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஜெயசிக்குறு நடவடிக்கையின் போது,
- அழுதநங்கை (சுந்தரம் கலாதேவி, விஸ்வமடு.
- செல்வராணி (குமாரவேல்புஸ்பராணி முத்தையன்கட்டு
- இபலறிவு [இராசதுரைகஜலட்சுமி தர்மபுரம்.
- ஈழத்தரசி (இராமசாமி சசிகலா) திருகோணமலை.
- தணிகைமலர் (வெற்றிமலை தமிழினி) யாழ் மாவட்டம்

ஆகிய போராளிகள் தமது தரப்பில் உயிரிழந்துள்ளதாக விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர். (ந-5)


## இப்பொழுது புதியஇடத்தில் எங்கள் சேவை

எமது மதிப்புமிக்க வாடிக்கையாளர்களான உங்களுக்கு மேலும் சிறப்பாக சேவைகளை வழங்கும் பொருட்டு எமது யாழ்ப்பாணக் கிளை அலுவலகம் 2001-02-06 தொடக்கம் இல. 12, கே. கே எஸ் வீதியில் அமைந்துள்ள வீரசிங்கம் மண்டபத்தில் முதலாவது தளத்துக்கு எடுத்துச்செல்லப்படுகின்றது என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

**வரையறுக்கப்பட்ட இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்**

'றக்ஷண மந்திரய' 21, வொக்சோல் வீதி, கொழும்பு. 2

தொலைபேசி: 325311 - 16 327322 - 34
435301 - 04 320906 329748
தொலைநகல்: 447742

(கி-1451)



## கேள்வி அறிவித்தல்

### மதுபான விற்பனைக்கு ஏற்ற கட்டிடங்கள் தேவை

பனை அபிவிருத்திச்சபையால் அண்மையில்பொறுப்பேற்கப்பட்ட திக்கம் வடிசாலையில் உற்பத்திசெய்யப்படும் பனம் சாராயத்தினை விற்பனை மேற்கொள்வதற்கு யாழ்ப்பானத்தில் யாழ் மாநகரசபை எல்லைக்குள்ளும், நெல்லியடியிலும் நகரசபை எல்லைக்குள்ளும் தலா ஒவ்வொரு கட்டிடம் தேவையாகவுள்ளது.

குறித்த கட்டிடம் 500 சதுரஅடி பரப்பளவைக் கொண்டதாகவும், ஒருவழிப் பாதையுடையதாகவும் மேற்கூரை சீமெந்தினால் அமையப்பெற்றதாகவும் இருத்தல் வேண்டும் மேலும் இக் கட்டிடம் அமையப்பெற்றஇடம் பாடசாலை, கோயில் முதலியவற்றுக்கு அண்மையில் அமையாததாகவும் கலால் திணைக்கள சட்டதிட்டங்களுக்கு ஏற்பவும்இருத்தல்அவசியமாகும்.

மேற்குறித்த தகவல்களுக்கு அமைவாகவுள்ள கட்டிட சொந்தக்காரர்கள் தங்களது கேள்விஅறிவித்தலை பின்வரும் முகவரிக்கு எமக்கு எதிர்வரும்15/02/2001ம் திகதியன்று அல்லது அதற்கு முன்னதாக மூடிய தபாலுறையில் இடது பக்க மேல் மூலையில் "கேள்வி அறிவித்தல்" என்பதனை குறிப்பிட்டு அனுப்பி வைக்கவும்.

தலைவர்,
பனை அபிவிருத்திச் சபை

தலைமையகம்,
பனை அபிவிருத்திச் சபை,
53, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

(கி-1452)




'இன்னுயிர் நீப்பினும் நந்தமிழ் காப்போம்"

பேராசிரியர்

# அ. சண்முகதாஸ்

அவர்களின்

# மணிவிழா

**இடம் :** **சுப்பிரமணியம் மண்டபம்,**
பேராசிரியர் சு. வித்தியானந்தன் அரங்கு
யா- திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாலயம்
யாழ்ப்பாணம்

**காலம் :** **2001-02-04 இன்று**
**மாலை 2-00 மணி**

**தலைவர் : திரு. திருநாவுக்கரசு கமலநாதன்**
பீடாதிபதி, யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி
தலைவர், பேராசிரியர் அ. சண்முகதாஸ்
மணிவிழா அமைப்பு

### நிகழ்ச்சிகள்

2.00 - 2.30 மங்கள இசை ;
திரு என். கே பத்மநாதன் குழுவினர்
2.30 - 2 35 மங்கள விளக்கேற்றல் ;
திரு எஸ் சதாசிவமூர்த்தி. திரு. எஸ். சிவராசா
திரு. ஆ மகாலிங்கம் திருமதி எஸ். ஜெயராசா
2.35 - 2.40 தமிழ் வேதம் ஓதல்:
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி மாணவிகள்
2.40 - 2.45 தமிழ்த் தாய் வாழ்த்து :
2.45 - 2 55 வரவேற்புரை :
கவிஞர் இராசையா குகதாசன் (உபதலைவர்)
2 55 - 3 03 தலைமையுரை :
3.05 - 3.15 அருளாசியுரைகள் :
ஸ்ரீலஸ்ரீ. சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய ஸ்சுவாமிகள்
3.15 - 3 25 : அருட்கவி சி. விநாசித்தம்பிப் புலவர்
3,25 - 3,35 பேராயர் கலாநிதி எஸ். ஜெபநேசன்

### வாழ்த்துரைகள்

3 35 - 3.45 திரு. க. சண்முகநாதன்
(அரசாங்க அதிபர், யாழ்மாவட்டம்)
3.45 - 3.55 பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை
(துணைவேந்தர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
3 55 - 4.05 சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி
(தலைவர் துர்க்கையம்மன் தேவஸ்தானம், தெல்லிப்பழை)
4,05 - 4.15 கலாநிதி என். தணிகாசலம் பிள்ளை
(மேலதிகக் கல்விப் பணிப்பாளர் யாழ்ப்பாணம்)

### விழாநாயகரைக் கௌரவித்தல்

4.15 - 4.40

செந்தமிழ்த் திலகம் விருது வழங்கல் : மணிவிழா அமைப்பு
வாழ்த்துப்பா பாடி வழங்கல் :மகாவித்துவான் பிரம்மஸ்ரீ வீரமணிஐயர்

4.40 -5.30

மலர் வெளியீடு : சண்முகதரிசனம் (இரண்டு நூல்கள்)
வெளியீட்டுரை : மூதறிஞர் வித்துவான் க. சொக்கன்
முதற் பிரதி பெறுநர் : வைத்திய கலாநிதி லயன் வை. தியாகராஜா
ஆய்வுரை : கலாநிதி சபா. ஜெயராசா
பதிலுரை : திரு. பா. தனபாலன் (மலராசியர்)
ஏற்புரை : விழாநாயகர்

### விருதினை உருவமைத்த கலைஞர் கௌரவம்

5,30 - 6.30

**கலைநிகழ்ச்சிகள்**
நன்றியுரை : மதுரகவி. காரை. எம். பி. அருளானந்தன்
(செயலாளர், பேராசிரியர் அ. சண்முகதாஸ்மணிவிழா அமைப்பு)

விழா மண்டபத்தில் "சண்முக தரிசனம்" இரண்டு நூல்கள் வெளியிடப்படும்.

இரு நூல்களினதும் விலை 200-00

பேரன்புமிக்க தமிழன்பர்களே!

**'தமிழ் மொழியே பேராசிரியர் பேராசிரியரே தமிழ்மொழி'**

தமிழ் மொழியின் மணி விழாக் காண வாரீர்
உங்கள் அனைவரையும் அன்புக் கரம் நீட்டி அழைக்கின்றோம்.

நன்றி.

திரு. தி. கமலநாதன்
தலைவர்

மதுரகவி காரை: எம். பி. அருளானந்தன்
செயலாளர்

பேராசிரியர் அ. சண்முகதாஸ் மணிவிழா அமைப்பு
யாழ்ப்பாணம்.

(கி1950)

### பேச்சு வார்த்தையும்

# யுத்த நிறுத்தமும் உடனடியாக ஏற்படுத்தப்பட வேண்டும்

## அமைச்சர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பேச்சுவார்த்தையும் அதன் ஊடாக யுத்தம் நிறுத்தப்படுவதும் அவசியதேவையாக உள்ளது. எமது பாரம்பரிய தாயகத்தை வலியுறுத்தும் அரசியல் தீர்வுடன் உண்மையான ஜனநாயக சூழல் ஏற்படுத்தப்பட வேண்டும். அதுவே மக்களுக்கான சுதந்திரத்தைநோக்கி எம்தேசத்தை நகர்த்தும்.

இலங்கையின் சுதந்திரதின நிகழ்வை ஒட்டி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச்செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

சுதந்திரம் என்பது வெறுமனே எழுதிவைக்கப்பட்ட வார்த்தையல்ல. ஒரு சிலருக்குரிய தனிச் சொத்துமல்ல. சுதந்திரம் என்பது கட்டற்ற வாழ்வுமல்ல. கட்டுப்பாட்டின் எல்லைகளை உணர்ந்து கொள்ளும் பொது மக்கள் அனுபவிக்க வேண்டிய அரியதொரு பொதுச்சொத்து.

53 ஆண்டுகளுக்கு முன்னர் இடம்பெற்ற ஆட்சி மாற்றத்தின் விளைவாக ஏற்பட்ட அதிகாரப் போட்டியானது இனவாத வித்துக்களை ஊன்றியது. பதவிகளுக்கான போராட்டத்தின் மூலதனமாக இனவாதம் வளந்ர்து விட்டமையின் பெறுபேறாக இந்நாட்டின் ஒரு தேசிய இனமாக வாழ்ந்த மக்கள் அந்நியர்களாக ஓரங்கட்டப்படலாயினர். இதன் விளைவாக 48 ல் கிடைத்தது வெறும் ஆட்சி மாற்றம் மட்டும்தான் என்று கருதி மீண்டும் சுதந்திரத்திற்கான குரல்கள் ஒலித்தன.

நாமும் ஆயுதம் ஏந்திப் போராட நிர்ப்பந்திக்கப்பட்டோம். போராட்டக்களத்தில் கைகோர்த்து நிற்க வேண்டியவர்கள்கருவிகளால் மோதிக் கொண்டதால் அரவணைத்துச் செல்லவேண்டியவர்கள் ஆதிக்கம் செலுத்தியதால், எமது பயணம் திசைமாறித் தடுமாறியது. ஆயுதபாணிகளான ஒருசாராரின் அடாவடித்தனங்களால் உள்நாட்டிலும் சரி, சர்வதேச அரங்கிலும் சரி நண்பர்களுக்குப் பதிலாக எதிரிகளையே தேடிக் கொள்ள முடிந்தது.

இன்று தமிழ்பேசும் மக்கள் இந்த உரிமைகளுக்காகப் போராடி இருந்த சுதந்திரத்தையும் இழந்துவிட்ட நிலை விரும்பியபடி நாம் உரிமைகளுக்காகப் போராடுவதற்குக் கூட சுதந்திரமற்ற நிலை இந்நிலை நீடித்துக் கொண்டிருந்தால் அழிவுகளே மீதமாகும்என்ற அச்சம் மட்டும் தான் இங்கு மிச்சமாகிக் கொண்டிருக்கிறது.

சரிந்துபோன போராளிகள்! பொதுமக்கள்! சிதைபோன தேசம். வாழ்க்கை! ஊனமுற்றவர்களாகியுள்ளவர் பலர். விதவைகளாயிருப்போர் பலர். ஆதரிப்பாரற்றஅநாதைகளாகப்பலர்

இத்தகையவர்கள் புன்னகையை, நிம்மதியை இழந்து தவிக்கின்றனர்.

இந்த நிலைமைகளை உணராமல் சந்தர்ப்பவாதநிலைப்பாடுகளை மேற்கொள்ளும் சில தமிழ் கட்சிகள் ''வீரம்'' கொப்பளிக்கும் வார்த்தைகளை வீசுகின்றன. ஆனால் தொடர்ந்து கொண்டிருக்கும் பகைமைகளால் இவர்களின் கண்ணீரைத்துடைக்க முடியாது. இரணமாகிப் போயுள்ள வாழ்க்கைக்காவது நிவாரணமாவது தேட முடியாது.

பழிக்குப் பழி என்று கோபக்கணலை மூட்டுவதற்குப் பதிலாக உரிமைகளை நிலைநாட்டும் திட சித்தத்தையும், அழிவுக்குப் பதிலாக ஆக்கத்தைத் தேடும் உளப்பாங்கையும் ஊட்டி வளர்க்க வேண்டும். இவ்வாறு அச்செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

# பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

இம் மாதம் 02 – ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி, வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப் பட்டவர்களின் இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாகத் தரப்படுகின்றன.

**சங்கானை**

| | |
|---|---|
| 161551 ஏ | 173042 ஏ |
| 175113 ஏ | 175113 பி |
| 175113 சி | 176993 ஏ |
| 176993 பி | 176993 சி |
| 178595 ஏ | 178595 பி |
| 178669 ஏ | 178669 பி |
| 178938 ஏ | 178938 பி |
| 179116 ஏ | 179259 ஏ |

**நல்லூர்**

| | |
|---|---|
| 179034 பி | 158958 ஏ |
| 172861 ஏ | 172861 பி |
| 175919 ஏ | 175919 பி |
| 178894 ஏ | 179034 ஏ |
| 179193 ஏ | 179193 பி |
| 179333 ஏ | |
| 179338 ஏ | 179338 பி |
| 179490 ஏ | 179490 பி |
| 179490 சி | 181408 ஏ |
| 181427 ஏ | |

**சண்டிலிப்பாய்**

| | |
|---|---|
| 175016 ஏ | 175016 பி |
| 176678 ஏ | 176820 ஏ |
| 176820 பி | 176887 ஏ |
| 176954 ஏ | 176954 பி |
| 176954 சி | 178655 ஏ |
| 178851 ஏ | 178886 ஏ |
| 179040 ஏ | 179093 ஏ |
| 179125 ஏ | 179171 ஏ |
| 179341 ஏ | 179426 ஏ |
| 179426 பி | 179440 ஏ |
| 179440 பி | 170440 சி |
| 179443 ஏ | |

**தெல்லிப்பழை**

| | |
|---|---|
| 175727 ஓ | 179470 ஏ |

**உடுவில்**

| | |
|---|---|
| 172994 ஏ | 172994 பி |
| 173112 ஏ | 176840 ஏ |
| 177007 ஏ | 178657 ஏ |
| 178683 ஏ | 178733 ஏ |
| 178768 ஏ | 178768 பி |
| 178802 ஏ | 178974 ஏ |
| 178974 பி | 179046 ஏ |
| 179051 ஏ | 179051 பி |
| 179067 ஏ | 179106 ஏ |
| 179106 பி | 179121 ஏ |
| 179121 பி | 179122 ஏ |
| 179168 ஏ | 179222 ஏ |
| 179251 ஏ | 179423 ஏ |
| 179498 ஏ | 181423 ஏ |
| 181443 ஏ | 181446 ஏ |
| 181446 பி | 181456 ஏ |
| 181456 பி | 181515 ஏ |
| 181515 பி | 181515 சி |

# வாந்தி எடுத்தவர் மரண மடைந்தார்

## குருநகரில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

வீட்டில் வாந்தி எடுத்தவர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்படும் வழியில் மரணமான சம்பவம் குருநகர் பகுதியில் அண்மையில் இடம் பெற்றுள்ளது.

மூன்று பிள்ளைகளின் தந்தையான றிச்சாட் றெனோல்ட் (வயது - 27) என்பவரே மரணமானவராவார். (க-104)

# நாய்களிலும் கேடாக குஜராத் மக்கள்

(புதுடில்லி)

லொறிகளில் இருந்தவாறே நாய்களுக்கு வீசுவதுபோல் உணவுப்பொட்டலங்களை வீசியெறிகிறார்கள்.

போதிய கூடாரவசதி, போர்வை வசதிகள் இன்மையால் சிறுவர்கள் குளிரில் விறைத்துப் போகின்றனர் என்றும் கவலை தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, இப்பகுதியில் இடிபாடுகளுள் சிக்கியுள்ள உடல்கள் அழுகி நாற்றம் எடுப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் இப்பகுதிகளில் வயிற்றோட்டம் போன்ற தொற்றுநோய்கள் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (செ)

# அமைச்சர்கள் செலவுகளைக் குறைக்கவும்

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியை கருத்திற் கொண்டு அமைச்சர்கள் பிரதி அமைச்சர்கள் அரச செலவினங்களைக் குறைத்து ஒத்துழைப்பு வழங்க வேண்டும் இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அமைச்சர்களைக் கேட்டுள்ளார்.

யுத்த செலவினங்கள் எண்ணெய் விலை அதிகரிப்பு அமைச்சுப் பணிகளை விரிவு படுத்தல் போன்ற காரணங்களால் அரச செலவினங்களால் அதிகரித்துள்ளன.

இது தொடர்பாக உள்நாட்டு வருமானம் கடன் பெற்றுக் கொள்ளும் நிலை என்பனவும் மட்டுப்படுத்தப் படவுள்ளன. எனவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார். (செ)

# நயினாதீவில் தொடரும் புனரமைப்பு வேலைகள்

(ஊர்காவற்றுறை)

வடக்கு மீள் குடியமர்வு, புனருத்தாரண அதிகார சபையின் உதவியுடன் நயினாதீவு வடக்கில் புனரமைப்புவேலைகள் இடம்பெற உள்ளதாக வேலணைபிரதேச சபைத் தலைவர் ந. கருணாகர குருமூர்த்தி தெரிவித்துள்ளார்.

பதினொருலட்சத்து நாற்பதாயிரம் ரூபாசெலவில் ஐந்து வீதிகளும், சனசமூக நிலையமும் புனரமைக்கப்படவுள்ளதுடன் நன்நீர்கிணறு அமைக்க காணி கொள்வனவு செய்யப் படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

ஆலங்குள வீதி புனரமைத்தல் (தார்), வங்களாவடி வீதி புனரமைத்தல் (தார்). பெருங்குளம் வீதி புனரமைத்தல் (கிரவல்), கற்புலம் வீதி புனரமைத்தல் (கிரவல்), கேணிக்குழி வீதி புனரமைத்தல் (கிரவல்). ஸ்ரீ ஞானவைரவர் சன சமூக நிலையம் புனரமைப்பு, நீர் வழங்கல் கிணறு அமைத்தலும் காணி கொள்வளவும்ஆகிய வேலைத் திட்டங்களும் இடம்பெறவுள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது. (க-75)

# கண்சத்திரசிகிச்சைநிலைய திறப்பு விழா நாளை

(அரியாலை)

யாழ். போதனா வைத்திய சாலையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள கண் சத்திர சிகிச்சை நிலையக் கட்டடத் திறப்பு விழா நாளை திங்கட்கிழமை வைத்தியசாலை ப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி செல்வி நவமலர் கனகரத்தினம் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வில் துர்க்கா துரந்தரி சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு கண் சத்திர சிகிச்சை நிலையத்தை திறந்து வைப்பார்.

கண் சத்திர சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி ச. குகதாசன் இந் நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக்கலந்து கொள்வார். செஞ்சொற் கொண்டல் ஆறு. திருமுருகன் சிறப்புரை ஆற்றுவார். (இ-செ-106)

## வவுனியாவில்-சுதந்திரதினம்

வவுனியா மாவட்ட செயலகத்தில் இலங்கையின் 53வது சுதந்திரதின நிகழ்ச்சிகள் இன்று நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் வட பகுதி புனர்வாழ்வு புனரமைப்பு பிரதி அமைச்சர் சுமதிபால தேசியக்கொடியை ஏற்றி வைப்பார்.

இதனைத் தொடர்ந்து வவுனியா தமிழ்மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ள கூட்டத்தில் யாழ்.பல்கலைக்கழக வவுனியாவளாக முதல்வர் பேராசிரியர் என். மோகனதாஸ் சிறப்புரை ஆற்றவுள்ளார். [வ]

# இலங்கையின் சுதந்திர தினத்தை கரிநாளாக அனுஷ்டிக்குக

## சுதந்திர மாணவர் முன்னணி வேண்டுகோள்

இலங்கையின் சுதந்திரதினமான இன்றைய நாளை கரிநாளாக அனுஷ்டிக்குமாறு கோரும் துண்டுப் பிரசுரமொன்றை யாழ். மாவட்ட சுதந்திர மாணவர் முன்னணி என்ற அமைப்பு வெளியிட்டுள்ளது.

அத் துண்டுப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள விபரம் வருமாறு;

1948ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரம் அடைந்தபோதிலும், இந்தச் சுதந்திரம் தென்பகுதி மக்களிற்கு குறிப்பாக சிங்கள மக்களிற்கு கிட்டிய சுதந்திரமாகவேகொள்ள முடிகிறது. ஏனெனில் இலங்கை சுதந்திரம் அடைந்த நாளில் இருந்து தமிழர்களின் சொத்துக்கள் சூறையாடப்பட்டும் தமிழ் பெண்கள் பாலியல் வல்லுறவிக்கு உள்ளாக்கப்பட்டும் தமிழர்கள் கண்டபடி கைது செய்யப்பட்டு சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள நிலையில் அரசின் அடிவருடிகளாக செயற்பட்டு வரும் சில சக்திகள், எம் இனத்தின் விடுதலைக்கு எதிராக அரசுடன் சேர்ந்து சதி முயற்சியில் ஈடுபடுவதில் கங்கணம் கட்டி நிற்கின்ற வேளையில்,

ஒட்டுமொத்த தமிழர்களாகிய நாங்கள் ''பெப்ரவரி4'' ஐ ஒரு கரி நாளாக அனுஷ்டிப்பதுடன் அரசின் திட்டமிட்ட இன அழிப்பிற்கு எதிராகவும் குரல் கொடுக்கும் ஒரு நாளாகவும் இந்நாளை பிரகடனம் செய்கிறோம்.

தமிழர் தேசியம், தமிழர் தாயகம் தன் ஆட்சி உரிமை தமிழர்களிற்கு கிடைக்கின்ற தமிழர்கள் சுதந்திரமாக வாழக்கூடிய நாள் எப்போது மலருகின்றதோ அன்றுதான் எமது சுதந்திரதின நாளாக இருக்க முடியும் என்று அத் துண்டுப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நியாயவிலை ஆணைக்குழு நியமிக்கஜனாதிபதிமுயற்சி

(கொழும்பு)

பொருட்களின் விலையைக் கட்டுப் பாட்டிற்குள் வைத்திருப்பதற்கென நியாயவிலை ஆணைக்குழுவைமறுசீரமைப்பதற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா நடவடிக்கை மேற் கொண்டுள்ளார்.

அத்தியாவசிய பொருட்களின் விலையைக் குறைப்பதற்கும், கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவும் ஜனாதிபதியின் கண்காணிப்பின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும், இன்னும்சில மாதங்களுக்குள் பொருளாதார நெருக்கடியை தீர்க்க நடவடிக்கையை எடுத்துள்ளதாகவும் ஜனாதிபதி உறுதியளித்துள்ளார்.

யுத்தத்திற்காக பெருமளவு பணம் செலவிடப்படுவதனாலும்' உலக சந்தையில் எண்ணெய் விலை அதிகரித்துள்ளதனாலும் ஏற்பட்டுள்ள பிரச்சினையை அடுத்து பெருத்த பொருளாதார பின்னடைவு ஏற்பட்டுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது. (செ)

# செய்தித் துளிகள்

## வெள்ளத்தால் பாதிப்பு

(கொழும்பு)

தொடர்ந்து பெய்து வரும் கடும்மழை காரணமாக அம்பாறை மாவட்டத்தில் மட்டும் பதினையாயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அம்பாறை மாவட்ட உதவி அரசாங்க அதிபர் அப்பையா அபயரட்ண கூறியுள்ளார்.

வெள்ளத்தால் திருக்கோயில், அக்கரைப்பற்று ஆகிய பகுதிகள் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதோடு அப்பகுதிகளில் உள்ள 800 வீடுகளும் முற்றாக சேதமடைந்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(செ-4)

## வீதி துப்பரவு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபையின் எல்லைக்குள் அமைந்துள்ள ஆடியபாதம் வீதி துப்பரவாக்கும் பணி தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நல்லூர் பிரதேச சபை ஊழியர்கள் இப்பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

(உ-1(4)

## நெல்லியடியில் புதிய மின்மாற்றி

(மந்துவில்)

நெல்லியடி, அரசடிப் பகுதியில் புதிய மின்மாற்றி ஒன்று இலங்கை மின்சார சபையினரால் பொருத்தப்பட்டுள்ளது.

துன்னாலைப் பகுதிக்கு உயர் அழுத்த மின்சாரம் வழங்குமுகமாகவே மேற்படி மின்மாற்றி பொருத்தப்பட்டதாக மின்சாரசபை உயர் அதிகாரி தெரிவித்துள்ளார்.

(க-39)

## பதில் செயலர் நியமனம்

(மந்திகை)

பருத்தித்துறை நகர சபையின் பதில்செயலாளராக அன்ரன் கிறைசிஸ் உள்ளூராட்சி உதவி ஆணையாளரால் இம்மாதம் 1 ஆம் திகதி முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

அதேவேளை நிரந்தரமாக செயலாளர் ஒருவரை நியமிக்குமாறு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கோரியிருப்பதாக நகரசபை உபதலைவர் ந. மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

(க-25)

## மதகு திருத்தம்

(மந்துவில்)

கலிகைச் சந்தைக்கு அண்மையில் உள்ள மதகு திருத்தம் செய்யப்பட்டு பொதுமக்கள் பாவனைக்கு திறந்து விடப்பட்டுள்ளது.

கடந்த மூன்றுமாத காலமாக மேற்படி மதகு திருத்த வேலைகள் இருகட்டங்களாக மேற்கொள்ளப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது.

(க-39)

## நாளை நேர்முகத் தேர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய கல்லூரியின் முறைசாராக் கல்விப் பிரிவினரின் அனுசரணையுடன் நடைபெற உள்ள பத்திரிகைத் துறை பயிற்சி நெறித்திட்ட பயிலுநர்களுக்கான நேர்முகத் தேர்வு மேற்படி கல்லூரி தம்பர் மண்டபத்தில் நாளை 5 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு நடைபெற உள்ளது.

மேற்படி பயிற்சி நெறிக்கு விண்ணப்பித்தவர்கள் தேவையான ஆவணங்கள் சகிதம் சமுகமளிக்கும் படி கேட்கப்பட்டுள்ளனர்

(க-ப-18)

## இயங்காத நிலையில் பாடசாலைகள்

(மண்டைதீவு)

ஊர்காவற்றுறை சின்ன மடு றோமன் கத்தோலிக்க வித்தியாலயம், காரைநகர் மெய்கண்டான் வித்தியாலயம் ஆகிய இரு பாடசாலைகளும் கடந்த ஆறு ஆண்டுகளாக இயங்காத நிலையில் உள்ளன.

இப்பகுதிகளில், மக்கள் மீளக்குடியேறி ஆறு ஆண்டுகளைக் கடந்துவிட்ட நிலையிலும் போதிய ஆசிரியர்கள் இன்மையாலேயே இப் பாடசாலைகள் இயங்கமுடியாத நிலையில் உள்ளதாக தீவக கல்வி வலயம் தெரிவித்துள்ளது.

மேற்படி இரு பாடசாலைகளும் மீளவும் இயங்கினால் தமது பிள்ளைகள் கல்வி கற்பதற்கு வசதியாகயிருக்கும் என பெற்றோர்கள் மத்தியில் கருத்துத் தெரிவிக்கப்படுகின்றது. (செ-11)

## உற்சவம் ஆரம்பம்

(நல்லூர்)

கொக்குவில் தலையாழி அருள்மிகு ஸ்ரீ ஞானவைரவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம், இன்று ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் இவ்வலங்கார உற்சவம் நடைபெவுள்ளது. (உ-103)

## பண்ணிசை போட்டி

(நல்லூர்)

யாழ்.சைவபரிபாலன சபையின், புண்ணிய நாச்சியம்மையார் தினத்தை யொட்டிய பண்ணிசைப் போட்டி, வரும் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை, வண்ணை- நாவலர் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. (உ-103)

## வீதி திருத்தம்

(மூளாய்)

யாழ்ப்பாணத்தில் இருந்து அராலி வீதி யூடாக செல்லும் வீதியில் துப்பரவு வேலைகள் தற்போது இடம் பெற்று வருகின்றன.

அராலிப் பகுதியிலேயே இத்திருத்த வேலைகள் இடம் பெற்று வருகின்றன. (க)

## திருவூஞ்சல்

(நல்லூர்)

கோண்டாவில் சாமுண்டா தேவிசமேத ஸ்ரீ ஞானவைரவர் ஆலய கும்பாபிஷேகத் தினத்தினையொட்டிய சங்காபிஷேகவிழாவும், திருவூஞ்சல் நிகழ்வும் இம் மாதம் 6 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சிறப்புற நடைபெறவுள்ளது.

(உ-103)

## அழகு பெறும் பூந்தோட்டம்

[யாழ்ப்பாணம்]

வைத்தியசாலைக்கு முன்பாகஉள்ளபூந்தோட்டத்திற்கு மேலும் அழகூட்டல் செயற்பாடுகள் தற்போது இடம் பெற்று வருகின்றது.

சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் பிரிவினரே மேற்படி பணியில் ஈடுபட்டு வருறன்றனராம். [க-104]

## ஆலயம் புனரமைப்பு

[நல்லூர்]

திருநெல்வேலி பரமேஸ்வராச்சந்தியிலுள்ள விநாயகர் ஆலயத்தின் உள்மண்டபபுனருத்தாரண வேலைகள் ஆரம்பிக்கப் பெற்றுள்ளன.

[உ-018]

# நாடளாவிய வேலை நிறுத்தம் இம் மாத முடிவில் இடம்பெறும்

## இலங்கை தாதிமார் சங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

எமது நீண்டகாலக் கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால் இம்மாத முடிவில் நாடளாவிய ரீதியில் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவோம்.

இலங்கை அரசாங்கத் தாதிமார் சங்கம் இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக தாதிமார் சங்கம் மேலும் தெரிவிக்கையில்;

மேலதிக கொடுப்பனவு, திறனுள்ள இடமாற்ற முறைகள், சம்பள முரண்பாடுகள் தவிர்ப்பு போன்றவிடயங்கள் தொடர்பாக பலதடவைகள் அரசுக்கு தெளிவாக விளக்கியிருந்தோம்.

ஆனால் இலங்கை அரசாங்கமோ இதுவிடயத்தில் ஏனோதானோ என்ற மனப்போக்கிலே செயற்பட்டு வந்தது.

எனவே எமது கோரிக்கைகள் நிறைவேற்றாதவரை வேலைநிறுத்தப்போராட்டத்தில் ஈடுபடுவது தவிர்க்கமுடியாத ஒன்றாகிவிடும் என்றும் இலங்கை தாதிமார் சங்கம் திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.

தாதிமார் சங்கத்தின் மேற்படி அறிவிப்பானது இலங்கை அரசாங்கத்திற்கு பாரிய சிக்கலை ஏற்படுத்தலாமெனவும் பரவலாக கருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்றன. (க-செ)

## புதுமெருகு

(நல்லூர்)

திருநெல்வேலி இராமகிருஷ்ணாலய வளாகத்தில் அமைந்துள்ள சுவாமி விவேகானந்தர் திருவுருவச்கிலையமைந்துள்ள மண்டபம் மீள்வர்ணம் தீட்டப்பெற்றுப் புதுமெருகூட்டப்பட்டுள்ளது (உ-103)

## இராசி பலன்

4-02-2001

(தை 22, ஞாயிறு)

ஏகாதசி மு.இ 10.30 வரை
மிருகசீரிடம் பி.இ 2 54 வரை
ராகுகாலம் 5.05- 6.35
சுபநேரம் 9.35- 11.05
சித்தம், வீம ஏகாதசி விரதம்

**மேடம்**
காரியம் கைகூடும், சகோதரர் உதவி, பிரயாணம், அன்னியர் சந்திப்பு.

**இடபம்**
வாக்குக் கலகம், பணச் செலவு, கௌரவக் குறைவு, முயற்சி தாமதம்.

**மிதுனம்**
ஆழ்ந்த சிந்தை, ஜனவசியம், சயனசுகம், உடல்நலம்.

**கடகம்**
உணர்ச்சி வசப்படல், காரியஅலைச்சல், சுபசெலவு, பிதா சிந்தை.

**சிங்கம்**
கீர்த்தி, காரியம் கைகூடும், குடும்ப சுகம், மனமகிழ்ச்சி.

**கன்னி**
அதிகார நிலை, தொழில் சிறப்பு, முயற்சி கைகூடும், வியாதி.

**துலாம்**
நிலைக்கேடு, பிரயாணம், தந்தை வழி உறவு, கட்டுப்பாடு.

**விருச்சிகம்**
எதிர்பாராத மனத்தாங்கல், உடல் சோர்வு, காரியம் தாமதம், பிரயாண பயம்.

**தனுசு**
போசன சுகம், பிரயாணம், சுவாரஸ்யம், தனவரவு.

**மகரம்**
எதிரிகள்விலகுவர், சந்தோசமான நிகழ்வு. சுக வாழ்வு, முயற்சி ஜெயம்.

**கும்பம்**
தாழ்வு நிலை, மனக்கவலை, காரிய தாமதம், வியாதி.

**மீனம்**
கல்விச் சிறப்பு, தன்னம்பிக்கை குறைவு, நன்மை விருத்தி, காரியம் கைகூடும்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

வளவன்

## நெருக்கடியின் மத்தியில் நயினை செல்லும் பக்தர்

(ஊர்காவற்றுறை)

நயினாதீவு நாகபூசனி அம்மன் ஆலயம் சென்று திரும்பும் பக்தர்கள் போக்குவரத்தில் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாகத் தெரியவருகின்றது.

வெள்ளிக்கிழமைகளில் ஆலயம் செல்லுவதற்கு காலையில் வடபிராந்திய போக்குவரத்துச் சபையினால் விசேட பேருந்து சேவை இடம்பெறுவதாகவும் ஆனால் பின்னேரம் திரும்புகின்ற வேளையில் இந்த விசேட பஸ்சேவை இல்லை எனவும், வழமையாக இடம்பெறும் பேருந்துசேவையில் பயணிப்பதால் பெரும் இடநெரிசலினை எதிர்நோக்குவதாக தெரிவிக்கப்படுகின்றது

இதனால் வழமையான போக்குவரத்தில் பிரயாணம் செய்யும் நெடுந்தீவு, நயினாதீவு மக்களும் பெரும் துன்பப்படுவதாகத் தெரியவருகின்றது.

ஒருபேருந்தில்பெருந்தொகையானோர் பிரயாணிப்பதாகவும் இதனால் ஏற்படக்கூடிய விளைவுகளினை தடுப்பதற்கு சம்பந்தப்பட்டோர் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவிக்கப்படுகின்றது; (க-75)

## சிறுவர் உரிமைகள்

## விழிப்புணர்வை ஏற்படுத்த மாணவரிடையே போட்டி

(யாழ்ப்பாணம்)

சிறுவர்உரிமைகள் தொடர்பாக மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடன் சிறுவர் பாதுகாப்பு நிதியம் (ஐ.இ) யாழ். மாவட்டத்திலுள்ள ஐந்து வலயங்களிலும் போட்டிகளை நடத்தவுள்ளதாக மேற்படி அமைப்பைச்சேர்ந்த ஜெ. தற்பரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக நேற்று முன்தினம் மாகாணக் கல்விப் பணிப்பாளர் அலுவலகத்தில் வலயக்கல்விப் பணிப்பாளர்களுடன்இடம்பெற்றகலந்துரையடாலின்போது தற்பரன் மேலும் தெரிவிக்கையில்,

சிறுவர்களின் உரிமைகள் பற்றியவிழிப்புணர்வைமாணவர்கள் மத்தியில் ஏற்படுத்தும் முகமாக 'சமூக முன்னேற்றத்தில் சிறுவர் பங்கு' 'சிறுவர் உரிமைகளும் நடைமுறைகளும்' 'சிறுவர் நலன்கள்' போன்ற விடயங்களில் மாணவர்கள் மத்தியில் போட்டிகள் நடத்தப்படுமென கூறினார். (ந)

## யாழ்-செயலகத்தில் தேசியதின விழா

யாழ். செயலகத்தில் தேசியதின விழா இன்வநடைபெறவுள்ளதாகசெய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது

விசேடபூசை, தேசியகொடி ஏற்றல், தேசிய தினத்தின் முக்கியம் பற்றிய உரைகள் என்பன இடம்பெறவுள்ளதாகவும்தெரிவிக்கப்பட்டுள்ளது. அரசஅலுவலர்கள் பெருமளவில் இந்நிகழ்வில் கலந்து கொள்வர்.

## காலநிலை சீரில்லை நெற் செய்கை பாதிப்பு

## உயர்அதிகாரி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இவ்வருடம் பெரும் போக நெற் செய்கைக்கான போதிய காலநிலை சீரின்மையால் நெற் செய்கையில் பாரிய பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக விவசாய திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை மாலை இடம் பெற்ற அனைத்து திணைக்கள தலைவர்களுடனான கலந்துரையாடலில் பங்குபற்றி பேசிய போதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கடந்தவருடம் காலநிலை கைகொடுத்ததால் நெற் செய்கை அதிகளவில் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் சிறந்த பயனையும் அடைய முடிந்தது. ஆனால் இம்முறை காலநிலை மிகமோசமான நிலையில் இருந்ததால் நெற் செய்கை குறைந்தளவிலே விவசாயிகள் ஈடுபட்டனர். பயிர்களும் சிறந்த பயனை தரவில்லை என்றார்.

(க-12)

## அடிக்கடி மின் தடை பொது மக்கள் சிரமம்

(ஈச்சமோட்டை)

யாழ். நகர்ப்பகுதியை அண்டிய பகுதிகளில் அடிக்கடி ஏற்படும் மின்சாரத் தடையினால் பொதுமக்களும் மாணவர்களும் பெரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது:

வழமையாக ஒன்றைவிட்ட ஒருநாளுக்கு மின்சாரத்தடை இரவு வேளையில் நடைமுறைப்படுத்தப்பட்டுவருவது தெரிந்ததே, எனினும் மின்சாரம் வழங்கும் நாட்களில் கூட அடிக்கடி மின்தடை ஏற்படுவதோடு சீரற்ற மின்வழங்கலும் ஏற்படுவதால் கல்விக்கும் மாணவர்களும் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்:

எனவே மாணவர்களின் கல்வியையும் பொதுமக்களின் இயல்பு நிலையையும் பாதிக்காத வண்ணம் மின் விநியோகத்தை சீராக நடத்தி உதவ வேண்டும் என பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது; (க-59)

# கலை நயம் மிளிரும் பாதச் சுவடுகளை ஆழப்பதித்தவர்

# அகவை அறுபது காணும் பேராசிரியர் அ. சண்முகதாஸ்

அகவை இரண்டாயிரத்தில் மணிவிழாக் கண்டு மகிழ்கிறார் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உயர்பட்டப் படிப்புக்கள் பீடப் பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்கள். வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து செயற்கரிய சீர்மைகளின் இருப்பிடமாகத் திகழும் பேராசிரியரின் மணிவிழா ஆண்டில் அவரை வந்து அணைத்த ''மணிவிழா'' என்னும் பதமே பெருமை கொள்கிறது. பல்துறை வேந்தரின் பாதங்கள் பட்ட இடங்கள் எங்கணும் கலைநயம் மிளிர்ந்திருந்ததைக் காணும் வாய்ப்பினை இவ்வுலகம் பெற்றது. கலையுலகில் எங்கள் பேராசானின் பங்கு காத்திரமானது.

## கூத்தில் கிருஷ்ணன் வேடம்

ஈழத்துத் தமிழ் நாட்டுக் கூத்து மரபு பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்களின் புனருத்தாரணப் பணிக்குப்பின் புது முனைப்புப் பெற்றது. அக்கால கட்டத்திலே அவரோடு தோள் கொடுத்து நின்று உழைத்த ஒருவர் எங்கள் பேராசான் ''கர்ணன்போர்'' எனும் வடமோடி நாட்டுக் கூத்திலே கிருஷ்ணராக அவர் ஏற்ற வேடம். அந்நாட்டுக் கூத்துக்கே ஒரு முத்திரை பதித்தது. கிருஷ்ணராக வேடமிட்ட அவரது வேடப் பொருத்தம் கணீரென ஒலிக்கும் அவரது மணிக்குரல்– நாற்பத்திரண்டிற்கு மேற்பட்ட கண்ணனது நாமங்களைக் கொண்ட ''பரந்தாமன் தாமோதரன் நந்த கோபன் .... '' எனும் வரவுப் பாடலைப் பாடியவாறு சபையிலே வந்த பொழுது சபையே எழுந்து நின்று அந்த மாயவனையே தம்முன்னே கண்டது போலக் கரம் கூப்பிப் பரவசம் எய்திய நிகழ்வு பேராசிரியரின் திறமைக்கு ஒரு சான்று. இது தெல்லிப்பழையிலே நிகழ்ந்த ஒரு அற்புதச் சம்பவமாகும்.

## பின்னணிப் பாடகர்

இராவணேசன், வாலிவதை நொண்டி போன்ற பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்களது நாட்டுக் கூத்துக்களுக்கு இசை நெறியாளராகப் பணியாற்றிய தோடு பின்னணிப் பாடகராகக் குரல் கொடுத்தவரும் இவரே. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தால் வெளியிடப்பட்ட L B. Records இல் இடம்பெறும் 'தோட்டம் திறந்தல்லவோ காத்தலிங்கன் நானும்...'' ''ஏலே ஏலோ...'' போன்ற கப்பற் பாட்டுக்களையும் பாடியுள்ளார் இந்த ஒலித்தட்டின் உயிர் நாடியே இவரது குரல் வளமும் பாவமும் எனலாம். ''போர்க்களம்'' எனும் வடமோடி நாட்டுக் கூத்தில் ஏடு வாசிப்பாளராகவும் கடமை புரிந்துள்ளார். நாட்டுப் புறவியல் ஆய்வுக் கருத்தரங்குகளில் அவருடைய ஆய்வுப் பணிகள் எண்ணற்றவை. இலங்கை நாட்டார் பாடல்

## பொ. அருந்தவநாதன்

விரிவுரையாளர், யாழ்ப்பாணக்கல்லூரி.
செயலாளர், யாழ்-நாட்டார் வழக்கியற்கழகம்.

நாட்டார் இலக்கிய மரபில் இடம்பெறும் ''மழைக்காவியம்''–காத்தவராயன் கூத்துகளைத் தொகுத்துப் பதிப்பித்துத் தந்ததிலும் இவருடைய பணி காத்திரமானது.



## இசை நாடகங்கள்

பேராசிரியர். அ. சண்முகதாஸ் அவர்களின் கடந்த காலங்கள் அவரது கலைக் கோலங்களை இவ்வாறு காட்டுகையில் இன்றும் அவரது கலைப்பணி, அறப்பணிகள் தொடர்வதை நாம் காண்கிறோம். யாழ்ப்பாணம் நாட்டார் வழக்கியற் கழகத்தின் பெருந்தலைவராகத் திகழும் பேராசிரியர் அவர்கள் கழக வளர்ச்சியின் ஒரு தூணாகித் துணைநிற்கிறார். இக்கழகத்தின் தயாரிப்பில் உருவான காத்தவராயன்கூத்து, சத்தியவான் சாவித்திரி, ஸ்ரீவள்ளி போன்ற இசை நாடகங்கள் பேணப்பட்டு வருவதற்கும் பூதத்தம்பி போன்ற புதிய இசைநாடகங்கள் வெளிவருவதற்குமான வாய்ப்புக்களை உருவாக்கிக் கொண்டிருக்கிறார். நாட்டார் வழக்கியற்கழகம் மூலம் 'நாட்டார் இசை மாலை' எனும் நாட்டார் பாடற் தொகுப்பு நிகழ்ச்சி பேராசிரியரின் நெறியாள்கையில் சிறப்புப் பெற்று விளங்கியது ஈழத்து முன்னணி இசை நாடகக் கலைஞர்களைக் கௌரவித்து, அவர்களது நாடகமேடைப்பாடல்களைக் கொண்ட 'ஒலிநாடா'வை வெளியீடு செய்தமை இவரது செயற்றிறன் மிக்க பணிக்குச் சான்றாகும்.

## நலம் பல பெறுக

ஆண்டு அறுபது ஆனாலும் இன்றும் கவினுறு இளைஞனாகத் தன்கலைப்பணியிலும், கல்விப்பணியிலும், சமூக அறப்பணியிலும் காலூன்றிச் சாதனை படைத்து வரும் பேராசான் 'The face is the Index of the mind' எனும் ஆங்கில முதுமொழிக்கு இலக்கணமானவர். மாண்புறு மணிவிழா ஆண்டில் தம் மனையாளோடும், மக்களோடும் நலம்பல பெற்று நீடூழிவாழ வாழ்த்துகின்றோம் எம் ஆசானை.

வாழி நீடு !

மலர் அமைப்பு
கு. விஜய குமார்
(வலம்புரி செய்தியாளர்)

மணிவிழாக்காணும்
**பேராசிரியர் சண்முகதாஸ்**
அவர்களை நூற்றாண்டு விழாக்காண
வாழ்த்துகின்றோம்.
சகலவிதமான அன்பளிப்புப் பொருட்கள்,
பான்ஸி பொருட்களுக்கு
**யூனிவேர்சல் பான்ஸி**
பலாலி வீதி,
பரமேஸ்வராச் சந்தி,
திருநெல்வேலி.
(கி-1418)

**பேராசிரியர் சண்முகதாஸ் அவர்களை**
பல்லாண்டு வாழ வாழ்த்துகிறோம்
**பொருளியல் கல்லூரி**
இணுவில். யாழ்ப்பாணம்.
(கி/1415)

**பேராசிரியர் சண்முகதாஸ் அவர்கள்
தங்கள் பணியில் மேன் மேலும்
மேன்மை பெற வாழ்த்துகிறோம்**
**S. T. P. COMPUTER WORLD**
**54, A, Palaly Road Kantharmadam
Jaffna**
(கி/1420)

நடமாடும் பல்கலைக்கழகம்
**பேராசிரியர் சண்முகதாஸ் அவர்கள்**
பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்.
வீட்டுக்கு தேவையான மரத்தளபாடங்கள் அனைத்தும்
பெற்றுக் கொள்ளலாம்.
**ஈஸ்வரி**
**மரக்காலை அன் தொழிலகம்**
பதிவு இல: 72
பலாலி வீதி,
பரமேஸ்வராச் சந்தி,
திருநெல்வேலி.
(கி-1416)

தமிழுக்கு பெருமை சேர்த்துத் தந்த
**பேராசிரியர் சண்முகதாஸ்**
அவர்களை அவர் பணிதொடர வாழ்த்துகிறோம்
C. D மூலம் பாடல்கள் ஒலிப்பதிவு செய்து தரப்படும்
**நியூவே றெக்கோடிங் ஸ்பொட்**
கலை நிகழ்ச்சிகளுக்கு அழைத்து மகிழ
**ராகம்ஸ் இசைக்குழு**
684, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
குறிப்பு: ராகம்ஸ் இசைக்குழுவுக்கு வேறு தொடர்பகங்கள் இல்லையென்பதை தெரிவிக்கிறோம்.
(கி-1419)

யாழ். மண்ணுக்கு பெருமை சேர்க்கும்
**பேராசிரியர் சண்முகதாஸ்**
அவர்களை
**பல்லாண்டு வாழ
வாழ்த்துகிறோம்**
**D. C. S**
**திருநெல்வேலி**
**D. C. S**
**நெல்லியடி**
(கி-1417)

## வாழ்த்துரை

தமிழ் செய்த தவப்பயனால் ஒரு சிலர் தோன்றித் தமிழ் செய்கிறார்கள். அந்த வரிசையில் கலாநிதி அ. சண்முகதாஸ் யாழ். பல்கலைக்கழகத்தின் தனிப்பெரும் தமிழ்ப் பேராசிரியராய் தமிழ்த்துறை, இசைத்துறை, மொழிபண்பாட்டியற்துறைத் தலைவராய், பட்டப்பின்படிப் புகள் அலகின் பீடாதிபதியாய் தொண்டு செய்வதோடு நின்றுவிடாமல் சமுதாயத்தோடு தான் கலந்து வாழக் காண்கின்றோம்.

திருநெல்வேலியில் உள்ள சைவ வித்தியா விருத்திச் சங்கத்தினது தலைவராய் இருந்து அவர்கள் நடத்தும் சிறுவர் நிறைவாழ்வு இல்லப் பிள்ளைகளுக்கு அவர் ஆற்றும் பணி அளவிடற்கரியதாகும். அதேபோல் பல்கலைக்கழகத்துள் அமைந்துள்ள பரமேஸ்வரன் கோவிற் பணிகளில் அவரின் பங்கும் பாராட்டப்பட வேண்டியதாகும். தெய்வ பக்தியும் ஆலயத் தொண்டும் இவர் குடும்பச் சொத்து. பேராசிரியர் நீடு வாழ்ந்து, தமிழ் சமயத் தொண்டு புரிந்து சிறக்க மணிவிழா நாயகனை ஆசிகூறி வாழ்த்துகிறோம்.

**ஸ்ரீமத் சோமாஸ்கந்தவேள்சுவாமி.**

7ஆவது குருபீடாதிபதி ஸ்ரீ சிவகுருநாத் பீடம்,
வேதாந்த மடம் யாழ்ப்பாணம்.

## பேராசிரியக் கலைஞர் சண்முகதாஸ்

பேராசிரியர் அ. சண்முகதாஸ் பேராதனைப் பல்கலைக்கழக மாணவராய் இருந்த காலத்திலே சில சிறு கதைகளும் பல கவிதைகளும் ஆக்கித் தாம் ஒரு படைப்பாளர் என இனம் காட்டியுள்ளார். **(ஆதாரம்கதைப்பூங்கா 1962)** பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கத்தில் நாட்டுக் கூத்துக்களிலே முதன்மைப் பாத்திரங்களை ஏற்று நடித்தும், பேச்சு மேடைகளிலே இனிமையாகப் பாடல்களை இசைத்தும் அவர் தமது நடிப்பாற்றலையும் இசையாற்றலையும் வெளிப்படுத்தியுள்ளார். இவற்றால் இவருள்ளே கலைத்துவம் நிரம்பித் ததும்பியுள்ளமை புலனாகும். அழக சுந்தர தேசிகர் (பிரான்சிஸ் கிங்ஸ்பரி), பேராசிரியர்களான விபுலானந்த அடிகள், க. கணபதிப்பிள்ளை, சு. வித்தியானந்தன், க. கைலாசபதி, கா. சிவத்தம்பி ஆகியோர், தமிழ்க்கலை, பண்பாட்டுத்துறைகளிலே மிகுதியும் ஈடுபட்டிருந்தமையை நாம் நன்கறிவோம். அந்தப் பாரம்பரிய மரபின் வழிவந்த பேராசிரியர் அ. சண்முகதாஸ் **'பேராசிரியக் கலைஞர்'** என அழைக்கப்படுவதற்கு முற்றிலும் தகுதி வாய்ந்தவரே.

கலையுள்ளம் வாய்க்கப்பெறுவது உண்மையிலே பெரும்பேறுதான். அந்த உள்ளத்திலே மெல்லுணர்வுகள மேலோங்கி, 'கண்ணோட்டம் என்னும் கழிபெருங் காரிகை' நிலவுவது இயல்பு. பேராசிரியர் மனித நேயமும் அதன் விளைவான கண்ணோட்டமும் மிக்க உள்ளத்தினர் என்பதைத் திருநெல்வேலிச் சிறுவர் நல்வாழ்வில்லத்துக் குழந்தைகளின் 'தந்தை'யாக 'அப்பா'வாக அவர் விளங்குவது கொண்டு உணரலாம்.

கலைஞர், பன்மொழி அறிஞர் (தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம், மலையாளம், யப்பான்) அனுபவம் மிக்க நல்லாசிரியர், மொழியியல் இலக்கணம் வல்லார், கற்றாரும் மற்றாரும் நயந்திடப்பேசும் சொற்பொழிவாளர் என்ற இந்த ஐந்து முகங்களுக்கும் மேலானது அவர்தம் மனிதாபிமான முகம், அது அதோ முகம்! அந்த ஒரு முகத்திற்காகவே அவருக்குப் பல மணிவிழாக்கள் கொண்டாடலாம்.

பேராசிரியர் அ. சண்முகதாஸ் பல்லாண்டு இனிது வாழ்க!

**சொக்கன்**

## வாழ்க பல்லாண்டு

வந்தவா றறவே மறந்துதாம் வாழும்
மண்ணலம் கருதிடாது உயர்ந்த
தந்தகோ புரத்தே வாழுதல் பிறவிப்
பயனெனத் தருக்குவோர் நடுவே
செந்தமிழ் பேசித் தேசிய உடையில்
திரிகுவை எளிமையின் உருவாய்
இந்த நாள் உனக்கு மணிவிழா என்றார்
இனிமையை இனிமைசெய் திடுவார்

சூழும் உன்பணிகள் தலைமுறை தோறும்
சுடர்விடும்; அன்பினால் உலகை
ஆளுமுன் பாங்கும் கலைகளுக் கெளியை
ஆவதும் மண்மிசை அவைகள்
நீளவும் நின்று நிலைக்கவும் எம்மை
நிமிர்த்தவும் செய்வதும் மறவோம்
வாழுக பல்லாண் டையநின் வாழ்க்கைத்
துணையொடும் சிறப்பெலாம் எய்தி.

**கவிஞர் சோ. பத்மநாதன்**

செயலர்
சைவவித்தியா விருத்திச் சங்கம்
திருநெல்வேலி

# மாபணி [...]

## யாழ்ப்பாணப் பல்கலைக் கழகப் பட்[...]
## "செந்தமிழ்த் திலகம்" பேராசிரிய[...]
# மாண்புரை மணி[...]

## சிறந்த வழிகாட்டி

பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்கள் அகவை அறுபது அடைவதையொட்டி, வெளிவரவிருக்கும் மணிவிழா மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

பேராசிரியர் அவர்களுடன் அவர் மனைவியுடனும் கடந்த நாற்பது வருடங்களாக நெருங்கிப் பழகும் வாய்ப்பு எனது மனைவிக்கும் எனக்கும் கிடைத்தது. பேராசிரியர் அவர்கள் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் மாணவராக இருந்த போது பல்துறைகளிலும் சிறந்து விளங்கி, யாவரதும் அபிமானத்தையும் பெற்றிருந்தார். பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ் மன்றச் செயற்பாடுகளில் மிக்க ஆர்வத்துடன் ஈடுபட்டு வந்தார்.

பேராசிரியர் அவர்கள் பேராதனைப் பல்கலைக்கழகத்திலும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் சிறந்த விரிவுரையாளராகவும், ஆய்வாளராகவும், பட்டப்பின் படிப்பு மாணவர்களுக்குச் சிறந்த வழிகாட்டி ஆலோசகராகவும் விளங்கி வருகின்றார். தனது பேச்சாற்றலினால் யாவரையும் கவரவல்ல பேராசிரியர் கல்வி நிர்வாகத்துறையில் துறைத்தலைவராகவும், சிரேஷ்ட மாணவ ஆலோசகராகவும், விடுதிக்காப்பாளராகவும், கலைப் பீடாதிபதியாகவும் பணிபுரிந்து தற்போது பட்டப்பின் படிப்பு பீடாதிபதியாகவும் செயற்பட்டு வருகிறார்.

சர்வதேச ரீதியில் பல நாடுகளுக்குக் கல்விசார் பயணங்களை மேற்கொண்டு ஆய்வுத்துறையில் ஈடுபட்டு வருவதுடன் கலைத் தூதனாகவும் கருமமாற்றி வருகின்றார்.

பேராசிரியர் அவர்கள் கல்வித்துறையில் மட்டுமன்றி சமய, சமூகப்பணிகளிலும் ஆற்றி வரும் சேவை குறிப்பிடத்தக்கது. ஆலயங்கள் பலவற்றில் சமயச் சொற்பொழிவு ஆற்றி, சைவ சமயத்தின் வளர்ச்சிக்கும், எழுச்சிக்கும் பணியாற்றி வரும் அவர் திருநெல்வேலியில் 'சைவச் சிறுவர் இல்லம்' ஒன்றினையும் தலைமையேற்று நடத்தி வருவது அவரது சமூகப் பணிக்கு எடுத்துக்காட்டாகும்.


எவருடனும் அன்பாகவும், பண்பாகவும் பழகும் பேராசிரியர் அவர்கள் இன்னும் பல காலம் சீருஞ் சிறப்புமாக வாழ வேண்டும். அவரின் சேவை எமது மக்களுக்குக் கிட்ட வேண்டும் என இறைவனை வேண்டி பேராசிரியர் அவர்களுக்கு என் மனமார்ந்த வாழ்த்தையும் ஆசியையும் தெரிவித்துக் கொள்கிறேன். பேராசிரியருக்கான மணிவிழாவை ஒழுங்கமைத்த மணிவிழா அமைப்பினருக்கும் எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**பேராசிரியர்**
**பொன். பாலசுந்தரம்பிள்ளை**
துணைவேந்தர்
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்

## மொழியியல் ஆய்வின் மூத்த அறிஞன்

நிலை உயரும் போது பணிவு கொள்வது சாதாரண மானிடரால் முடியாததாகும். சாதாரண குடும்பத்தில் பிறந்து இந்த சகமே புகழும் வண்ணம் சாதனை படைத்தும்பாமர மக்களுடனோ, படித்தவர்களுடனோ பண்பொடு பணிவும் சேரப் பழகி வரும் ஓர் அசாதாரண மனிதர் தான் பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்கள், அவரது அறிவு, ஆற்றல், பன்மொழிப் புலமை என்பன அளவிட முடியாததாகும். மொழியியல் ஆய்வில் இவரின் பங்கு அளப்பரியதாகும் எமது உலகத்தமிழர் பண்பாட்டுக் கழகத்தின் செயற்பாடுகளுக்கு ஊக்கமும் ஒத்துழைப்பும் நல்கி வரும் உத்தமர் இவர். உலகத் தமிழர் பண்பாட்டுக்கழகத்தின்முன்னாள் தலைவர் மலேசியா இரா வீரப்பன் அவர்களுடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டிருந்தவர். இவரின் மொழியியல் ஆய்வில் அதிக ஈடுபாடு கொண்ட திரு வீரப்பன் யப்பான் -தமிழ் மொழித் தொடர்பு பற்றிய ஆய்வுப் புத்தகத்தின் ஐம்பது பிரதிகளுக்கு மேல் வாங்கி மலேசியாவில் மட்டுமல்ல உலகின் பலபாகங்களுக்கும் விநியோகித்தார் என்றால் பேராசிரியரின் மொழியில் ஆய்வுத்திறமையை யாவரும் உணர்ந்து கொள்ளலாம். அத்தகைய பெரியார் அவரின்அடியொற்றி ஆய்வுவிரிவுரையாளராகக்கடமையாற்றும்அவரது துணைவியாருடன்மணிவிழாக்காணுகின்ற இவ் வேளையில் அவரை வாழ்த்தி வணங்குவதில்பேருவகைஅடைகின்றேன்.

**இ. தவகோபால்**
இலங்கைக் கிளைச் செயலர்
உலகத்தமிழர் பண்பாட்டுக் கழகம்.



## பேரா[...]
## அருணாசலம்[...]

**பிறப்பு:**
1940 - 01 - 02 திரு[...]

**பள்ளிப்படிப்பு:**
தி அர்ச் பிரான்சிஸ்[...]
பாடசாலை, திருகோ[...]
மத்திய மகா வித்திய[...]
கலடி மட்டக்களப்பு[...]
சிவானந்த வித்தியா[...]

**பல்கலைப்படிப்பு:**
இலங்கைப் பல்கலைக்[...]
எடின்பரோப் பல்கலை[...]

**திருமணம்:**
1965-08-29 கண்டி[...]

**மனைவி:**
கலாநிதி மனோன்மன[...]

**பிள்ளைகள்:**
**கலைச்செல்வி**- குகசிறீ[...]
**செந்தூரன்**

**பேரப்பிள்ளைகள்:**
சேந்தினி, இளநிலா,[...]

**பதவிகள்: யாழ்ப்பாணப் ப[...]**
1) மொழி – பண்பா[...]
இசைத்துறைத் [...]
2) கலைப்பீடாதிப[...]
பீடாதிபதி, பதி[...]

★ **பொது**
1) உலகத்திராவிட[...]
செயற்குழு உறு[...]
2) மலாயாப் பல்க[...]
தேர்வுப் பாட[...]
3) உலகத் தமிழார[...]
கால உறுப்பினா[...]
4) உலக ஆசியக் க[...]
ஆயுட்கால உறு[...]

★ **தலைவர்**
1) சைவ வித்தியா[...]
2) வட இலங்கை [...]
ரிச்சபை
3) யாழ்/ நாட்டா[...]

**கருத்தரங்குகள்:**
இந்தியா, ஜப்[...]
மலேசியா, மொறீசி[...]
நாடுகளில் நடைபெ[...]
உலக மாநாடுகள், [...]
யமை

**கல்விசார் பயணங்கள்:**
இங்கிலாந்து, [...]
திரேலியா, கென்யா, தா[...]
பயணங்கள் செய்துள்ளார்[...]

**கட்டுரைகள்:**
100க்கு மேற்ப[...]
ளார்.

**ஆய்வுக்கட்டுரைகள்;**
40க்கு மேற்பட்[...]
யுள்ளார்.


**நூல்கள்:**
1. துணைவியார் மனோ[...]
03 நூல்கள் எழுதி[...]
2. தவிர 08ற்கு மேற்ப[...]

...யத்து... மாமணி

...பட்டப்பின் படிப்புகள் அலகின் பீடாதிபதி

...ரியர் அ. சண்முகதாஸ் அவர்களின்

# ...ரி விழாச் சிறப்பு மலர்



...ேராசிரியர்!
...லம் சண்முகதாஸ்

...2 திருகோணமலை

...ன்சிஸ் சவேரியார் றோ. க. த. க.
திருகோணமலை
...வித்தியாலயம் வந்தாறுமூலை, செங்
...ளப்பு
...த்தியாலயம், மட்டக்களப்பு

...ல்கலைக்கழகம், பேராதனை
...பல்கலைக்கழகம், ஸ்கொட்லண்ட்

...கண்டியில்

...ான்மணி B. A. (Hons) M. A. Phd

...குகசிறீ- திருநங்கை- ஞானசபேசன்

...ாநிலா, அபிதேன், தியானா
...ணப் பல்கலைக் கழகத்தில்
...பண்பாட்டியல்துறை, தமிழ்த்துறை,
...றைத் தலைவராக
...ாதிபதி, பட்டப்பின்படிப்புகள்
...தி, பதில்துணை வேந்தர்

...ராவிட மொழியியற் சங்கத்தின்
...ழ உறுப்பினர்
...ப் பல்கலைக்கழக இந்தியவியற்துறைத்
...பாடவிதான ஆலோசகர்
...தமிழாராய்ச்சி நிறுவனத்தின் ஆயுட்
...றுப்பினர்
...சியக் கற்கை நெறிகள் நிறுவனத்தின்
...ல உறுப்பினர்

...த்தியா விருத்திச் சங்கம்
...ங்கை ஆயுள்வேத மருத்துவக் கல்லூ
...ட்டார் வழக்கியற் கழகம்

..., ஜப்பான், ஜேர்மனி, பிரான்ஸ்,
...மொறீசியஸ், இந்தோனேசியா ஆகிய
...டைபெற்ற இருபதுக்கும் மேலான
...களுக்குகள், கருத்தரங்குகளிற் பங்குபற்றி

...ள்:
...ந்து, நைஜீரியா, சிங்கப்பூர், அவுஸ்
...ா, தாய்லாந்து ஆகிய இடங்களுக்குப்
...ள்ளார்.

...மேற்பட்ட கட்டுரைகள் எழுதியுள்

...;
...மற்பட்ட ஆய்வுக்கட்டுரைகள் எழுதி

...மனோன்மணியுடன் இணைந்து
...எழுதியுள்ளார்.
...மேற்பட்ட நூல்கள் எழுதியுள்ளார்.

## பல்துறை அறிஞனுக்கு ஒரு மணிவிழா

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறை தலைவரும், பட்டப்பின் படிப்புததுறையின் தலைவருமான பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்களுக்கு மணிவிழா நடைபெறப் போகின்ற செய்தி யாவர் மனதிலும் பெரிய தொரு உவகையைத் தந்துள்ளது. மீன் பாடும் தேன் நாட்டிலே கல்வி பயின்று வளர்ந்து உயர்ந்த மக்கள் ஆசான் ஒரு தமிழ்க் கடல் என்றே கூறவேண்டும். பேராதனைப்பல் கலைக்கழகத்தில் ஏராளமான மாணவர்களைத் தமிழ்த் துறையிலே வளர்த்த பெருமை அவருக்கு உண்டு.

இதே நேரத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் எண்ணற்ற மாணவர்களை உருவாக்கியதுடன் நாட்டுக் கூத்துத் துறையில் மிகவல்லவராக திகழ்கின்றார். நாட்டுக் கூத்துத் துறையில் ஆழமான நுட்பங்களை அறிந்து இன்று யாழ்ப்பாணத்திலே தமிழ்த் துறைக்கு மிகுந்த அலங்காரமாக திகழ்கின்றார். மக்கள் ஆசான் சண்முகதாஸ் அவர்கள் சைவசமயத்தில் ஆழ்ந்த ஈடுபாடும் ஆழ்ந்த புலமையும் உடையவர். அவருடைய மனைவி மனோன்மணி சண்முகதாஸ் அவர்கள் யப்பான் மொழி மூலம் தமிழை கற்பிக்கும் பெருமைக்குரியவர். கணவனும் மனைவியும் இணைந்து தமிழ்ப்பணி செய்கின்ற பெருமைக்குரியவர்கள். இதை விட பேராசிரியர் சண்முகதாஸ் அவர்கள் பல சந்தர்ப்பங்களில் பல விடயங்களில் பல ஆய்வுக்கட்டுரைகளை சமர்ப்பித்துள்ளார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. எங்கு தமிழ்விழா நடந்தாலும் அவருடைய கட்டுரை அங்கு நிச்சயமாக வாசிக்கப்படும். யாழ்ப்பாணம் செய்த பெருமை இன்று அவர் யாழ். பல்கலைக்கழகத்தில் பல அறிவாளிகளை உருவாக்கிக் கொண்டிருப்பது தான் அத்தகைய பெருமகனுக்கு மணிவிழா எடுப்பது மிகவும் சாலச் சிறந்தது. அவருக்கு மணிவிழா எடுப்பதன் மூலம் யாழ்ப்பாண அறிஞர் சமுதாயம் பெருமை பெறுகின்றது. எனவே மணிவிழா அமைப்பினருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அவர் பல்லாண்டு காலம் தமிழ்ப்பணி செய்து தமிழ் மக்களின் நன்மைக்காகச் செயற்படத் தமிழ்த்தாய் அவருக்கு நீண்ட ஆயுளையும், நல்லாரோக்கியத்தையும் வழங்க வேண்டுமென வேண்டிக் கொண்டு அவருடைய தமிழ்ப்பணி தொடர வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

திரு. க. சண்முகநாதன்
அரசாங்க அதிபர்
யாழ்ப்பாண மாவட்டம்

## வாழ்த்துகின்றோம் வணங்குகின்றோம்

எமது கழகத்தின் தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்களுக்கு மணிவிழா நடப்பதில் பெருமகிழ்வு கொள்கின்றோம்.

பல்துறைப்புலமையும் ஆற்றலும் வாய்ந்த பேராசிரியர் எம்மண்ணிலே இன்றும் பணியாற்றி வருதல் நாமெல்லாம் பெற்ற பெரும் பேறாகும். பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்கள் தமிழ் கூறும் உலகெங்கும் பேரறிஞரெனப்போற்றப்பெற்று மதிக்கப்பெற்று வருகின்றார். தமிழ்ப்பணி, சமூகப்பணி, அறப்பணி என்பவற்றைத்திறம்பட ஆற்றிவரும் பேராசிரியரை வாழ்த்தி வணங்குகின்றோம். அவர் இன்னும் நீண்டகாலம் எமது சமூகத்திற்கு தனது சேவைகளைத் தொடர்ந்து வழங்குவதற்கு நீண்ட ஆயுள் ஆரோக்கியத்தை வழங்கியருளுமாறு எல்லாம்வல்லஸ்ரீ பார்வதி பரமேஸ்வரரை இறைஞ்சி வேண்டுகின்றோம்.

பொ- அருந்தவநாதன்
யாழ்ப்பாணம் நாட்டார் வழக்கியற் கழகம்

## அனைத்தும் நிரம்பிய ஆசான்

உயர் படிப்புகளின் பீடநாயகர்
பேராசிரியர் சண்முகதாசனார்
மணிவிழாக் காண்பது மகிழ்ச்சிக்குரியது
மொழியியல், கூத்தியல், நாட்டார் கலைகள்
இலக்கிய விமர்சனம், இலக்கியப் பயில்வு
சான்றோர் செய்யுள், சைவம் வைணவம்
ஜப்பானியத்துடன் ஒப்பியல் முயல்வுகள்
கல்வித் தரங்களைக் கணிப்பிடும் ஆய்வு
முற்போக்கென்ன முயல்வுகள் மட்டுமா?
கவியரங்கத்திற் கலந்திடும் விருப்பம்,
தனித்தமிழ் மயத்தின் மனத்திலே நாட்டம்
பொறுப்பாள்கையிலே புலமை, வினைத்திறம்
சமூக அக்கறை, தளரா ஊக்கம்
அனைத்தும் நிரம்பிய ஆசான்
மனோன்மணி சமேதராய் மாண்புடன் வாழ்கவே:

-முருகையன்-

## தலைவரின் இதயத்திலிருந்து

பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்கள் தமிழ் கூறு நல்லுலகத்திற்கு நன்கு அறிமுகமான பேரறிஞர் தமிழ் மொழி மீதும், தமிழ்கூறும் நல்லுலகத்தின் மீதும் அளவு கடந்த பற்றுக்கொண்டவர்.

பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்களின் நன் மாணாக்கரான அவர் வழி நின்று தனக்கென ஒரு மாணவ பரம்பரையை உருவாக்கிச் சிறப்புப் பெற்றுள்ளார். இலங்கையின் பல பாகங்களிலும் தனது பேச்சால், எழுத்தால், சேவையால் தனக்கென ஒரு தனியிடத்தைப்பெற்று முத்திரை பதித்துள்ளார் இலங்கையில் மாத்திரமல்ல இந்தியா, இங்கிலாந்து, மலேசியா, சிங்கப்பூர், அவுஸ்திரேலியா, ஜப்பான் எனப் பல்வேறு நாடுகளிலும் தனது தனிச் சிறப்பைக் காட்டிப் பல தமிழியல் ஆய்வரங்குகளில் கலந்து சிறப்பித்துள்ளார். தனது சிறந்த அறிவியல் ஞானததால் பல பயனுள்ள நூல்களை ஆக்கியுள்ளார்.

மனித நேயப்பண்புடைய பேராசிரியர் மாணவர்களுடனும், மற்றவர்களுடனும், மிக அன்பாகப் பழகும் பாங்குடையவர். அவரது மனித நேயப் பண்பை மேலும் விளக்குவதாக அமைவது தான், சைவ வித்தியா விருத்திச் சங்கத்துடன் அவர் தன்னையும் தனது மனைவியார் திருமதி ச. மனோன்மணி அவர்களையும் இணைத்து கடந்த பல வருடங்களாக சைவ அனாதைச் சிறுவர்களுக்கு ஆற்றி வரும் தொண்டாகும்.

இத்தகைய பெருமைவாய்ந்த பேராசிரியருக்கு இவ்வாண்டு சிறப்பாக மணி விழா நடைபெறுகின்றது. அவருடன் சேர்ந்து தமிழ்த் தொண்டாற்றியவர்களும், அவருடைய மாணவர்களும் இணைந்து மணிவிழாவை ஏற்பாடு செய்துள்ளோம. இவ்விழாவைப் பயனுள்ள முறையில் கொண்டாட பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்களின் மணிவிழா அமைப்பினராகிய நாம் பல நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். இதற்கான உதவிகளை வழங்கிய அனைவருக்கும் எமது நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம். விழா இனிது நிறைவேற உதவிய இறையருளைத் துதிப்போம்.

சுபம்

திருநாவுக்கரசு கமலநாதன்
பீடாதிபதி,
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.
தலைவர்,
பேராசிரியர் அ. சண்முகதாஸ் மணிவிழா அமைப்பு
யாழ்ப்பாணம்.

மலரமைப்பு
கவிஞர் இராசையா குகதாசன்
(உப தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ் மணி விழா அமைப்பு)

## பிரார்த்தனை

சென்ற நூற்றாண்டின் நாற்பதுகளின் ஈழத் தாய்க்குக் கிடைத்த பிரகாசமான மக்களில் குறிப்பிட வேண்டிய ஒருவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்கள்.

ஐந்தாம் வகுப்பில், படிப்பில் புலமைக்கு அரசின் பரிசு பெற்ற அவர், இன்றைய மணி வயது வரை, கல்விப் பயணத்தில் முதலாம் வகுப்பில் பரிசுகள், பாராட்டுக்கள் பட்டங்கள் என்ற புலமைப் பொதிகளுடன் செல்கிறார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் அவரைக் கற்பித்த ஆசான்களின் சிறப்பான தனித்தன்மைகளைத் தேர்ந்து தனதாக்கிக் கொண்டவர் அவர். பேராசிரியர்கள் கணபதிப்பிள்ளையின் வித்தியம், செல்வநாயகம் அவர்களின் ஒழுக்கம், வித்தியானந்தன் அவர்களின் பெருந்தன்மையும் ஜனரஞ்சகமும் இவரின் சொத்துக்கள் ஆகின. அவர் பெற்ற அந்தச் செல்வங்களினால், நமது யாழ். பல்கலைக் கழகமும், பொது மக்களும் இன்று பயன் அடைகிறார்கள்.

உயர் பட்டக் கல்விச் சேவையுடன், தமிழ் ஆய்வு, கலைத் தொண்டு, ஏழைக் குழந்தைகளுக்கும் சமூக சேவை என்று ஓயாது உழைக்கும் அவரைப் பாராட்டுவது எமது உள்ளங்களுக்கு நிறைவும் ஆனந்தமும் தருவதாகும்.

பேராசிரியர் சண்முகதாஸ் அவர்களும், அவரின் பன்முக சேவைகளில் அவருடன் மதுரமாக இணையும் அவரது துணைவியாரும் நீடு வாழ்ந்து, தொண்டு செய்ய பகவானைப் பிரார்த்திக்கின்றேன்.

"நந்தி"

## பேராசிரியர் அ. சண்முகதாஸ் மணி விழா அமைப்பு

தலைவர்
திரு. திருநாவுக்கரசு கமலநாதன்
(பீடாதிபதி, யாழ். தேசியக் கல்வியியற் கல்லூரி,)

செயலாளர்
திரு காரை எம். பி. அருளானந்தன்
'மதுரகவி'

பொருளாளர்
திருமதி ஞானசக்தி கணேசநாதன்

உப தலைவர்
திரு இராசையா குகதாசன்
கவிஞர்

உப செயலாளர்
செல்வி சு. சுகந்தினி

பத்திராதிபர்
திரு பா. தனபாலன்
(உபபீடாதிபதி யாழ். தேசியக் கல்வியியற் கல்லூரி)

செயற்குழு உறுப்பினர்,
திரு க. நித்தியானந்தன் திரு கே தருமராஜா
திரு வி. கனகராஜா திரு இ. தவகோபால்
செல்வி மருதவாணர் ரோகினி

## ஆறுபத் தகவையிலே அழகு மொழி வள்ளல்

ஆறுபத் தகவையிலே அழகு மொழி தமிழ் சிறக்க
அவனியெலா முன் நாம மொலிக்கிறது
வீறு கொள் பரம்பரைக்கு விளங்கு தமிழ்க்குரிசில்
வெற்றி கொள் சண்முக தாஸ குருவே

பேறு கொள் பீடாதி பதியெனச் சிறந்து
பிஞ்சு தமிழ் விஞ்சுகிற மஞ்சத்திருவே
மாறுபடு துன்பங்கள் தமிழுக்கு வாராமல்
மனோன்மணீ துணை கொண்டு வாழி வாழி

**அளவையூர்- கே. எஸ். சிவஞானராஜா**

## நானிலம் பயனுற வாழ்க பல்லாண்டே!

பல்கலைக் கழகத் தமிழ்த் துறைத் தலைவராய்
பயன்மிகு ஆய்வுடன் நூல் பல ஆக்கிச்
சொற் பெருக் காற்றும் சிந்தனைச் செல்வராய்
சிவத்தமிழ் ஓங்கிடப் பணி செய் தொண்ட
-னாய்
அல்லல் அகற்றிடும் அநாத இரட்சகனாய்
பட்டப் பின் படிப்புப் பீடத்து அதிபதியாய்
நல்லுளம் கொண்டு பொலிந்திடும் பெரியோய்
நானிலம் பயனுற வாழ்க பல்லாண்டே!

**நாயன்மார்கட்டு ப. மகேந்திரதாசன்**

## வாழ்த்துரை

'திரிகரண சுத்தியும் காரிய சித்தியும் அருள்வாய்' என்கின்ற தொடரைத் தாரக மந்திரமாகக் கொண்டவர் சேர் பொன். இராமநாதன் அவர்கள் தீர்க்க தரிசனத்துடன் இராமநாதன் கல்லூரியையும், பரமேசுவரக் கல்லூரியையும் அவர் நிறுவினார். இலங்கையில் ஒரு பல்கலைக்கழகம் தோன்றுவதற்கு முதுகெலும்பாக இருந்து உழைத்தவர் சேர் பொன். அருணாசலம் அவர்கள்.

பரமேசுவரக் கல்லூரி யாழ்ப்பாணப் பல்கலைக் கழகமாயிற்று சமீபத்தில் வெள்ளிவிழாவையும் கண்டது. வெள்ளிவிழாக் கண்ட யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் வளர்ச்சிக்குப் பெரிதும் உழைத்தவரும், மூத்த தமிழ்ப் பேராசிரியருமான கலாநிதி அருணாசலம் சண்முகதாஸ் அவர்கள் இப்பொழுது மணி விழா நாயகராகப் பிரகாசிக்கின்றார்.

திருமலையில் பிறந்து மட்டு நகரில் உயர்கல்வி கற்றுப் பல்கலைக்கழகம் புகுந்து புகழ்பூத்த பேராசிரியர்களான வி. செல்வநாயகம், கலாநிதி சுப்பிரமணியம் வித்தியானந்தன் உள்ளிட்ட பலரைக் குருநாதர்களாகப் பெற்றமை அவர் செய்த பாக்கியமே.

எடின்பரோ பல்கலைக் கழகத்தில் மொழியியல் துறையில் ஆய்வினை மேற்கொண்ட அவர்கள் கலாநிதியானார். இத்தேர்வுக்கு இவரது ஆங்கிலப் புலமை பெரிதும் உதவியது.

உதவி விரிவுரையாளராக - விரிவுரையாளராக பேராசிரியராக - தமிழ்த்துறை தலைவராக - கலைப் பீடாதிபதியாக வளர்ச்சி பெற்ற பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்கள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உயர்பட்டப்படிப்புகள் பீடத்தின் முதலாவது பீடாதிபதியாகப் பல்கலைக் கழகத்தை அவர் அலங்கரித்துக் கொண்டு இருக்கின்றார் என்பதன் மூலம் அவரது திறமையை நன்கு அறிய முடிகிறது.

பேராசிரியர் சண்முகதாஸ் அவர்கள் சிறந்த பேச்சாளர், எழுத்தாளர் என்பதை இந்த நாடு மட்டுமன்றி, யப்பான், இந்தியா முதலிய தேசங்களே வரவேற்றிருக்கின்றன.

நாவலரில் நாவலர் வழியில் மிகுந்த பற்றுக் கொண்டவரான பேராசிரியர் அவர்கள் 'நாவலருக்குப் பின் நமக்கோர் காவலர்' என்ற பெருமையுடன் வாழ்ந்தவரான் இந்து போட் சு. இராசரத்தினம் அவர்கள் தொடக்கி வைத்த பணிகளில் ஈடுபடலானார்.

திருநெல்வேலி சைவ அநாதசாலை திரு. இராசரத்தினம் அவர்களது இருதயஸ்தானம் என்றால் மிகையாகாது. குறித்த நிலையம் 'சைவச்சிறுவர் நிறை வாழ்வு இல்லமாக' இன்று திகழ்வதற்குப் பேராசிரியர் சண்முகதாஸ் அவர்களது சிறந்ததலைமையே காரணம் எனலாம்.

சேவையே தெய்வம் என்ற உணர்வுடன் பணி செய்து வரும் மணிவிழா நாயகர் பேராசிரியர் கலாநிதி அ. சண்முகதாஸ் அவர்களுக்கு, இன்று பொதுமக்கள் சார்பில் எடுக்கும் மகிழ்ச்சிகரமான மணிவிழா, பேராசிரியரவர்கள் வரும் காலத்தில் காணவிருக்கும் பெரு விழாக்களுக்கெல்லாம் கால்கோள்விழாவாக அமைவதாக என்று எல்லாம் வல்ல இறைவன் திருவடிகளை மனதில் இருத்தி வாழ்த்துவோமாக.

ஆசிரியமணி
**அ. பஞ்சாட்சரம்**

# கிழக்கில் தொடரும் பெருமழை
# பெருமளவினர் இடம்பெயர்வு

## வெள்ளத்துள் மூழ்கும் வீதிகள்

[கொழும்பு]
அம்பாறை, மட்டக்களப்பு, பொலநறுவை ஆகிய மாவட்டங்களில் தொடர்ந்து பெய்துவரும் கடும் மழைகாரணமாக, கரையோரப் பகுதிகள் வெள்ளத்தால் மூழ்கடிக கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் மாத்திரம் சுமார் 85 ஆயிரம் பேர் வெள்ளத்தால் பாதிப்புற்றுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் பல இடங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளதுடன், வீதிகள் பலவும் வெள்ளத்துள் மூழ்கியுள்ளதால் போக்குவரத்து ஸ்தம்பிதம் அடைந்துள்ளது.

ஆயிரக்கணக்கானோர் வீடு வாசல்களை இழந்ததுடன் ஆயிரக்கணக்கான ஏக்கர் பயிர்நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வெள்ளத்தால் உடமைகளை இழந்தவர்கள் கோவில்களிலும் பாடசாலைகளிலும் தஞ்சம் புகுந்துள்ளனர்.

ஆறுகள், குளங்கள் வாவிகள் நிரம்பி வழிவதுடன் சில குளங்கள் உடைப்பெடுக்கும் அபாய நிலையில் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. [செ]

## எரிமலை வெடிக்கும் அபாயம்

(மணிலா)
பிலிப்பைன்சில் உள்ள மயோன் எரிமலை விரைவில் வெடிக்கும் என அச்சம் தெரிவிக்கப்படுகின்றது.

இதன் காரணமாக இம் மலைப்பகுதியைச் சூழவுள்ள இருபத்திரெண்டாயிரம் குடும்பங்களையும் பாதுகாப்பான இடங்களுக்கு இடம் பெயருமாறு அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது. (செ)

## மின்சார சபைக்கு எதிராக பிரேரணை நிறைவேற்றம்

[யாழ்ப்பாணம்]
நீர்வேலி, புத்தூர், சிறுப்பிட்டி, ஆவரங்கால் ஆகிய கிராமங்களுக்கான மின் இணைப்பு புனர் நிர்மாண பணிகளில் இலங்கை மின்சார சபையினர் சிரத்தை காட்டாமைக்கு வருத்தம் தெரிவித்து சிறுப்பிட்டி சன சமூக நிலையத்தினர் பிரேரணை ஒன்றை நிறைவேற்றியுள்ளனர்.

இது தொடர்பாக பிரேரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது கடந்த கால யுத்த சூழ்நிலைக்குப் பின்னர் புனர் நிர்மாண வேலைகளை மேற்கொண்ட இலங்கை மின்சார சபையினர் மிகவும் பாதிப்பிற்குட்பட்ட ஆவரங்கால், புத்தூர், நீர்வேலி, சிறுப்பிட்டி கிராமங்களின் மின் இணைப்பு விடயத்தில் சிரத்தை காட்டாமைக்கு வருந்துவதுடன், நடப்பு வருடத்திலாவது இப்பகுதி மக்களுக்கு அச்சேவையை வழங்க ஆவன செய்ய வேண்டுமென எமது நிலையம் மின் சக்தி எரிபொருள் பிரதிப்பாது காப்பு அமைச்சரையும், வடக்கு புனர் வாழ்வு அமைச்சரையும், இலங்கை மின்சார சபையின் வடபிராந்திய பிரதிப் பொது முகாமையாளரையும் வேண்டி பிரேரணையை நிறைவேற்றியுள்ளது. (க-12)

## கும்பாபிஷேகம்

[சங்கானை]
தொல்புரம் வழக்கம்பரை அருள் மிகுமுத்து மாரியம்மன் தேவஸ்தான மகா பாலஸ்தாபன கும்பாபிஷேக விழா எதிர் வரும் புதன்கிழமை நடைபெற உள்ளது. [ப-18]

## கோழித் திருட்டு

[சங்கானை]
சுழிபுரம் பகுதியில் உள்ள கோழிபண்ணையில் கடந்த திங்களன்று சுமார் 19இறைச்சிக் கோழிகள் [புமிறாயலர்[ திருடப்பட்டுள்ளது.

மேற்படி பகுதியில் வசிக்கும் வை. கைலைநாதன் என்பவரது வீட்டுப் பண்ணையிலேயே மேற்படி திருட்டுஇடம் பெற்றுள்ளது. [க—ப-18]

## சிறுப்பிட்டியில் நிர்வாகிகள் தெரிவு

[யாழ்ப்பாணம்]
51 வருடங்களாக இயங்கி வரும் சிறுப்பிட்டி சனசமூக நிலையத்தின் தலைவராக வே. பரிமேலழகப்பிள்ளை, உபதலைவராக க வல்லிபுரநாதன் இணைச்செயலாளர்கள்வி .வி. இராஜரத்தினம் தி. கெங்காதரன் பொருளாளர் க. நவநிதன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். [க-12)

## வாழ்க திரு. சண்முகதாஸ் வாழ்க மனோன் மங்கை

நாவின் திருத்தெய்வம் நாமகளாம் அன்னவளின்
மேவுந் திருப்பார்வைச் 'சண்முகதாஸ்' தேவியருள்
கூட மனோன்மணி யாளும் குவலயத்தில்
தேடுபுகழ் சேர்ப்பிர் தினம்.

ஆசையறும் அன்புள்ளம் ஆண்டு பலவாக
நேசம் அணிதமிழில் நேர்சைவம் - வீசுபுகழ்
ஈசன் பதம்போற்றி என்றும் கனகமுதல்
பேசுசீர் பெற்றிடுவீர் பேண்

வாழ்க்கைத் துணையாக வாய்த்த 'மனோன்மணி'
வாழ்வில் வளஞ்சேர்க்க வந்தபுகழ் - நீளுலகில்
நின்று நிலைக்க நேர் சேவை நீர்தொடர
நன்றுநீர் வாழ்வீர் நனி

வாழ்கதிரு, ''சண்முகதாஸ்'' வாழ்க ''மனோன்''
மங்கையரும்
வாழ்க இவரன்பு மக்கள் புகழ் - வாழ்கவே
செந்தமிழும் இவ்வுலகில் சீர்சேர் தமிழ்க்குலமும்
எந்தப் பொழுதும் இனிது.

**கவிஞர் ''சுகசீவன்''**

## மணிவிழாக் கண்டுமுழு நாள் வாழி!

தன்னைத்தன் நிலையிலிருந்து மேன்மே லாகத்
தனித்தியக்கிக் கல்வி உயர் தகைமை பெற்று(ப்)
பின்னைப்பேர் புகழோடு பீடும் பெட்பும்
பெற்றிட்டுப் பேராசி ரியரும் ஆகி;
கண்ணைப்போல் செந்தமிழைக் காத்துக் கலைகள்
கைதேர்ந்து பன்மொழியும் கற்று ஆய்வில்
எண்ணற்ற கட்டுரைகள் நூல்கள் தந்தோன்
எம்பொருநன் சண்முகதாஸ் ஏந்தல் வாழி!
துணைவியொடு தானிணைந்து பெற்ற பேறும்;
துய்ப்பற்ற சிறுவர் தமைக் காக்கும் மாண்பும்;
இணைபிரியா இல்வாழ்வின் இயல்பும் சீரும்
இன்தமிழின் நடையுடையும் ஏற்ற சால்பும்;
அனைவரையும் பட்டப்பின் படிப்பிற் காண
ஆவலுறும் வாண்மை மிகு தலைமைத் தேசும்
முனைவு பெற மணிவிழாக் கண்(டு) இன்பம் எய்தும்
மூதறிஞன் சண்முகதாஸ் முழுநாள் வாழி!

**- நயினைக் கவிஞர் - நா. க.சண்முகநாதபிள்ளை**

## இன்று ஒரு தகவல்

### மனிதனும் மாடும்

உழவன் இல்லையென்றால் இந்த உலகம் இல்லை என்று சொன்னால் மிகையாகாது. ஏனெனில், மனிதனுக்கு பசி வந்தல் பத்தும் பறந்திடும் என்பார்கள். அந்தப்பசியை தீர்க்கும் நெல் உற்பத்தி செய்யும் போது மனுதனும்மாடும் சரி நிகராக பாடுபட்டுத்தான் அந்த நெல்லை உற்பத்தி செய்கின்றன. உழவு செய்யும் போதும் சரிவிதைவிதைக்கும்போதும்சரி, அதுவிளைந்து அறுவடை செய்யும் போதும் சரி மனிதனும் மாடும் மிகவும் கஷ்டப்பட்டுத்தான் உற்பத்தி செய்யப்படுகின்றது. அப்படி உற்பத்தி செய்து நெல் அறுவடை செய்யும் போது மனிதன் தான் பெறுமதியானதும் சத்துள்ளதுமான நெல்லை எடுத்துக் கொண்டு மாட்டுக்கு வைக்கோலையே கொடுக்கின்றான். பின்பு அந்த நெல்லை அரிசியாக மாற்றம் செய்யும் போது தான்பெறுமதியான அரிசியை எடுத்துக்கொண்டு மாட்டுக்கு தவிட்டைக் கொடுக்கின்றான். பின்பு அந்த அரிசியை சோறாக்கும் போது சோற்றைத் தான் சாப்பிட்டுக் கொண்டு அதில் இருந்து கிடைக்கும் கஞ்சியை மாட்டுக்குக் கொடுக்கிறான். மனிதன் இப்படி எல்லாக் கழிவுப் பொருள்களையும் அதற்கு கொடுத்த போதும் அது நன்றி மறவாது தினமும் பால் தந்து கொண்டு தான் இருக்கின்றது. நாமும்எம்மை யாரும் மதிப்புக் குறைவாக நடத்தினாலும் யாருக்கும் தீங்குசெய்யாது நன்மையே செய்வோமாக.

ஸ்ரீசஞ்ஜீவன்
யாழ். வட்டு மத்திய கல்லூரி

# சுகாதாரமற்ற பாண் உற்பத்தி
# 13 பேக்கரிகள் மூடப்பட்டன

(வவுனியா)
வவுனியாப் பகுதியிலுள்ள பேக்கரிகளில் 13 பேக்கரிகளை மூடும்படியாக வவுனியாமாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி ஆறுமுகம் கேதீஸ்வரன் உத்தரவிட்டுள்ளார்.

வவுனியா மாவட்டத்திலுள்ள பேக்கரிகள் சுகாதார நடைமுறைகளுக்கு ஒவ்வாதவண்ணம்பாண் உற்பத்தியினை மேற்கொண்டமையினாலேயே 13 பேக்ரிகளையும் மூடும்படி சுகாதார அதிகாரி அறிவித்துள்ளார்.
(வ)

## பங்கீட்டு அட்டைக்கு 2 கிலோ சீனி

(மந்திகை)
பருத்தித்துறை பல.நோக்கு கூட்டுறவுச்சங்க கிளைகளில் தற்போது பங்கீட்டு அட்டைக்கு 2 கிலோ சீனி வீதம் வழங்கப்பட்டு வருவதாக சங்க முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

கிலோ 44 ரூபாவாக மேற்படி சீனி விநியோகிக்கப்பட்டு வருவதாகவும் இன்னும் இரண்டு தடவைகள் விநியோகிப்பதற்கான சீனி தற்போது கையிருப்பில் உள்ளதாகவும் முகாமையாளர் மேலும் தெரிவித்துள்ளார்.
(க-23)

## கைக்குண்டு வெடித்ததில் சிப்பாய் பலியானார்

(கொழும்பு)
விடுமுறையில் வீட்டுக்கு சென்ற இராணுவச் சிப்பாய் ஒருவர் கைக்குண்டு வெடித்ததில் ஸ்தலத்தில் மரணமானார்.

வவுனியா இராணுவ முகாமில் கடமையாற்றிவரும் ஜெயரத்னா (வயது 26) என்பவரே பலியானவராவார்.

பிரஸ்தாப சிப்பாய் கைக்குண்டு ஒன்றை தமது வீட்டிற்குஎடுத்துச்சென்றபோதே இவ் அனர்த்தம் நிகழ்ந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தின் போது சிப்பாய் பலியானதாகவும் இவரது சகோதரிக்கும், தந்தை யாருக்கும்காயம் எற்பட்டதாகவும் தற்போது கொழும்பு மருத்துவமனை ஒன்றில் இவர்கள் தீவிர சிகிச்சைக்குட்படுத்தப்பட்டுள்ளதாகவும் மேலும் அறியப்படுகிறது

இச்சம்பவம் குறித்து தீவிர விசாரணைகள் தற்போது இடம் பெற்று வருவதாக பொலிஸார் தரப்பில்தெரிவிக்கப்படுகிறது.
[க-வி]

## தையல் பயிற்சி வகுப்பு இம்முறை நயினாதீவில்

(மண்டைதீவு)
வேலணைப் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் வருடாந்தம் கிராமம் தோறும் நடத்தப்பட்டுவரும் தையல் பயிற்சி வகுப்புக்கள் இம்முறை நயினாதீவில் நடைபெற்று வருகின்றது.

எட்டு மாதங்களுக்கு கற்பிக்கப்படும் இப் பயிற்சியில் முப்பது பயிற்சியாளர்கள் பயிற்சி பெற்றுவருகின்றார்கள்.

இவர்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவாக நாளாந்தம் முப்பது ரூபா வழங்கப்படுகிறது.

பயிற்சி வகுப்பு நிறைவடைந்ததும் எதிர்வரும் 12 ஆம், 13 ஆம் திகதிகளில் நயினாதீவு மகா வித்தியாலயத்தில் தையல் கண்காட்சியும் நடைபெறவுள்ளது.
(செ-11)

## குருகுலத்துக்கு ஆட் சேர்ப்பு

[நல்லூர்]
யாழ். பல்கலைக் கழக, ஸ்ரீபரமேஸ்வரன் ஆலயத்தில் நடத்தப் பெற்று வரும், சிவாச்சார்ய குருகுலத்துக்கு புதிய மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பங்களை சேர். பொன். இராமநாதன்வேதாகமஆய்வு நிறுவனத்தின் சிவாச்சார்ய குருகுலத்தினர் கோரியுள்ளனர்.

சனி, ஞாயிறு தினங்களில் காலை 9.00மணி முதல் நண்பகல் 12.00 மணிவரை இக் குருகுல வகுப்புகள் இடம் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.
(உ-103)

## பருத்தித்துறை - யாழ் மினிபஸ்கட்டணம்மாற்றம்

(மந்திகை)
வடமராட்சி சிற்றூர்திகள் சேவைச் சங்கத்தினர் பயணக்கட்டணத்தை திருத்தியமைத்துள்ளதாக, சங்கத் தலைவர் க. சில்வஸ்ரர் தெரிவித்துள்ளார்.

புதிய கட்டண விபரங்கள் வருமாறு;

பருத்தித்துறையிலிருந்து மந்திகைக்கு 3 ரூபா, நெல்லியடிக்கு 5 ரூபா, மூத்தவிநாயகர் கோவிலடிக்கு 6 ரூபா, புறாபொறுக்கிக்கு 7 ரூபா, மண்டான், வல்லைசந்திக்கு 10 ரூபா, புத்தூருக்கு 12 ரூபா, நீர்வேலிக்கு 13 ரூபா, கோப்பாய் இருபாலைக்கு 14 ரூபா, முத்திரைச் சந்திக்கு 15 ரூபா, யாழ்ப்பாணம் 17 ரூபா.

யாழ்ப்பாணத்திலிருந்து முத்திரைச்சந்திக்கு 5 ரூபா, இருபாலைக்கு 8 ரூபா, கோப்பாய்க்கு9 ரூபா, நீர்வேலிக்கு 10 ரூபா, புத்தூர் வல்லைசந்திக்கு 12ரூபா, மண்டான், புறாப்பொறுக்கிக்கு 13 ரூபா, மூத்தவிநாயகர் கோவிலடி நெல்லியடிக்கு 15 ரூபா, மந்திகைக்கு 16 ரூபா, பருத்தித்துறை 17 ரூபாவும் அறவிடப்படுகிறது.

மேற்படி கட்டணத்தைவிட கூடுதலாக பணம் அறவிடப்படுமாயின் பொதுமக்கள் உடன் பருத்தித்துறை மினிபஸ் சங்கத்தினருடன் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.
(க-23)

## விக்ரம்- ராஜன்- கங்கு கிரிக்கெட் போட்டி

(யாழ்ப்பாணம்)
கொக்குவில் வளர்மதி முன்னேற்றக்கழக சனசமூக நிலையத்தின் அனுசரணையுடன் நடத்தப்படும் விக்ரம்-ராஜன் கங்கு ஞாபகார்த்த கிரிக்கெட் சுற்றுப்போட்டித் தொடரின் இறுதி ஆட்டம் இன்று காலை 9.00 மணிக்கு கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இச் சுற்றுப்போட்டியில் யாழ். பல்கலைக்கழக அணியை எதிர்த்து ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது.

இந் நிகழ்விற்கு ஓய்வு பெற்ற அதிபர் அ.பஞ்சலிங்கம் பிரதம விருந்தினராகவும் கொக்குவில் இந்துக்கல்லூரி அதிபர் பு.கமலநாதன் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்கிறார்கள்.
(செ)

## தொழிற்றிறன் பயிற்சி

(மந்திகை)
வடவராட்சி கல்வி வலய முறைசாரா கல்விப் பிரிவு பாடசாலைகளில் தொழில் திறன் பயிற்சி நெறிகளை நடத்துவதற்கான விண்ணப்பங்களை கோரியுள்ளது.

வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கணனி, வானொலி, தொலைக்காட்சி பேணல், கணக்கு பதிதல், உடை அமைத்தல் துணிஅச்சிடல். மனை முகாமைத்தும் தலை அலங்காரக்கலை, ஆங்கில சுருக்கெழுத்தும்தட்டெழுத்தும், தமிழ்சுருக்கெழுத்தும்தட்டெழுத்தும், மின்சார இலத்தினரியல் ஆகியபயிற்சி நெறி நடத்தப்படவுள்ளது.

இப் பயிற்சி நெறிகளில் பயிற்சி பெற விரும்பும் மாணவர்கள் அருகிலுள்ள பாடசாலைகளில் தமது விண்ணப்பங்களை சமர்ப்பிக்குமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ். சிவராஜா கேட்டுள்ளார்.
(க-23)

## சிறு குற்றங்கள் புரிவோருக்கு இனிமேல் சிறைவாசம் வழங்கப்படமாட்டாது
### புதிய திட்டம்விரைவில்அமுல்

(கொழும்பு)
சிறு குற்றங்கள் புரிவோரை சிறையில் அடைக்காமல் சமூகசேவையில் ஈடுபடுத்தும் புதிய திட்டம் ஒன்று விரைவில்அமுல்ப்படுத்தப்படவுள்ளதாக நீதி அமைச்சு அண்மையில் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

அச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; மேற்படி திட்டமானது கொழும்பு, மற்றும் புறக்கோட்டைப் பகுதிகளில் விரைவில் முதற் கட்டமாக செயற்படுத்தப்படும் என்றும் பின்னர் படிப்படியாக நாடு முழுவதும் விஸ்தரிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் தலைமையகம் கொழும்பில் இயங்கும் என்றும் இதற்கான அங்குரார்ப்பண வைபவம் எதிர் வரும் செவ்வாய்க் கிழமை இடம் பெறும் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
(ஐ)

## மோ. சைக்கிள் விபத்தில் நகரசபை உப தலைவர் காயமடைந்தார்

(மந்திகை)
மந்திகை சந்தி அருகில் நேற்று முன்தினம் ஏற்பட்ட மோட்டார் சைக்கிள் விபத்தின்போது அதில் பயணம் செய்த பருத்தித்துறை நகரசபை உப தலைவர் மற்றும் ஊழியர் ஒருவரும் காயமடைந்த நிலையில் மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நகரசபை உபதலைவர் நாகலிங்கம் மணிவண்ணன் (வயது-50) சதானந்தன் ஸ்ரீலோகானந்தன்(வயது-44) ஆகியோரே காயமடைந்தவர்களாவர்.

யாழ். செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற உள்ளூராட்சி சபை தலைவர்களின் கூட்டத்திற்கு கலந்து கொள்ளச் சென்ற போதே மேற்படி அனர்த்தம் இடம் பெற்றதாக தெரியவருகிறது.
(க-25)

## பொலிஸ் பாதுகாப்பு

(கொழும்பு)
ஒக்ஸ்பாம் நிறுவனம்மீதான கைக்குண்டுத் தாக்குதலையடுத்து இலங்கையிலுள்ள அனைத்து பிரித்தானிய அமைப்புக்களின் அலுவலகங்களுக்கும் பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயமும் அரச சார்பற்ற நிறுவனங்களும் கோரிக்கை விடுத்ததையடுத்தே இலங்கை பொலிஸ்மா அதிபர் இதற்கான பாதுகாப்பு உத்தரவை பிறப்பித்துள்ளார்.
(செ-05)

## 6ஆயிரம்மெற்றிக்தொன்சீனி திறைசேரிகொள்வனவு
### ஊழலை தடுக்கவாம்

(கொழும்பு)
ரூபாவை உலக சந்தையில் மிதக்க விடுவதற்கு முன்னதாக உள்ளூர் வர்த்தகர் சிலர் வெளிநாடுகளிலிருந்து கொள்வனவு செய்திருந்த ஆறாயிரம் மெற்றிக் தொன் சீனியை திறைசேரி அண்மையில் கொள்வனவு செய்திருப்பதாக உணவு கூட்டுறவுத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இது விடயம் தொடர்பாக திறைசேரி மேலும் தெரிவிக்கையில்; ரூபாவை சந்தையில் மிதக்கவிட்ட பின்னர் ரூபாவின் மதிப்பு குறைவடைந்த நிலையில் குறைந்த விலைக்கு இறக்குமதி செய்யப்பட்ட மேற்படி சீனியை கூடுதலான விலைக்கு விற்பதற்கு இவர்கள் மேற் கொண்ட முயற்சியை தடுக்கும் வகையிலே இவ்வாறு திறைசேரி நடந்து கொண்டதாக திறைசேரி தெரிவித்துள்ளது.

தற்போது கூட்டுறவுமொத்த விற்பனை நிலையத்திடம் இந்தச் சீனி ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்த சீனியை என்ன விலைக்கு விற்பனை செய்வது என்பது பற்றி இன்னமும் முடிவு செய்யப்படவில்லை என்று அமைச்சர் றெஜி றனதுங்க தெரிவித்துள்ளார்.
(க-05)

## மார்ச் 13 இல் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்

(கொழும்பு)
அமைச்சர்எம்.எச்.எம்.அஷ்ரப் கொல்லப்பட்ட ஹெலி விபத்து தொடர்பான விசாரணை அறிக்கையினை எதிர் வரும் மார்ச் மாதம் 13 ஆம் திகதி சமர்ப்பிக்கவேண்டும்.

நேற்று முன்தினம் மாவனல்ல நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கு விசாரணையின் போது மேற்படி நீதிமன்றம் இவ்வாறு உத்தரவிட்டுள்ளது.

இவ்விபத்து தொடர்பாக விசாரணை செய்த சர்வதேச எச்.பி.ஐ. நிறுவனத்தின் அறிக்கையினைப் பெறுவதற்கும் உடனடியாகநடவடிக்கை எடுக்க வேண்டும் என விமானப்படைத் தளபதிக்கும் இந் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
(செ)

## வாராந்த நிகழ்வு

(யாழ்ப்பாணம்)
தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையினரின் வாராந்த நிகழ்வுகளில் கடந்த வெள்ளிக்கிழமை ''தெய்வத்துணை'' என்னும் தலைப்பில் புற்றளைவித்தியாலய முகாமைத்துவ உதவியாளர் சி. கா. கமலநாதன் சொற்பொழிவாற்றினார்.
(செ)

# ஈழத்தமிழ் அகதிகளை ஜேர்மன் திருப்பி அனுப்பும்

(லண்டன்)

ஜேர்மனியில் அரசியல் தஞ்சம் அடைந்துள்ள ஆறாயிரம் இலங்கைத் தமிழ் அகதிகளை ஜேர்மனிய அரசாங்கம் இலங்கைக்கு திருப்பி அனுப்பும் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

இலங்கையில் தற்போது அமைதியான சூழ்நிலை உருவாகி விட்டதாக, இலங்கை வெளியுறவு அமைச்சு, ஜேர்மனிய அரசாங்கத்திற்கு கடித மூலம் அறிவித்ததையடுத்தே இம் முடிவை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜேர்மனிய அரசாங்கத்தின் இம் முடிவு தவறானது என தமிழ் வட்டாரங்கள் ஜேர்மனியிலுள்ள சர்வதேச மனித உரிமைகள் அமைப்பிடம் முறையிட்டுள்ளார்கள்

இம் முறையீட்டையடுத்து மேற்படி அமைப்பின் பிரதிநிதி இலங்கையின் தற்போதைய நிலைவரம் குறித்து, மனித உரிமை அமைப்புகளின் பிரதிநிதிகளையும், தமிழ்ப் பத்திரிகையாளர்கள் சிலரையும் சந்தித்துப் பேசியுள்ளார்.

இன்னும் ஒருசில மாதங்களில் இது தொடர்பான அறிக்கையினை ஜேர்மனிய அரசாங்கத்திடம் சமர்ப்பித்த பின்னரே இவ் இலங்கைத் தமிழர்களின் நிலை குறித்து அறிய முடியும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

(செ-5)

# குஜராத்தில் மீண்டும் பூமியதிர்ச்சி

# சோதிடர்கள் எச்சரிக்கை

(புதுடில்லி)

பூமியதிர்ச்சிக்குள்ளான குஜராத் மாநிலத்தில் மீண்டும் பூமியதிர்ச்சி ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள இருப்பதாக சோதிட விற்பன்னர்கள் எச்சரித்துள்ளனர்.

மரணத்தை ஏற்படுத்தும் கிரகமான புளுட்டோவும், ஆக்ரோஷமான கிரகமான செவ்வாயும் ஒன்றிணைந்து இருப்பதனால் மிகமோசமான பாதிப்புக்கள் ஏற்படும் எனவும் சோதிடர்கள் எச்சரித்துள்ளனர்.

இதனால் கிலிகொண்ட மக்கள் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறி வெறும் தரவை நிலங்களில் வசித்து வருகிறார்கள்.

குஜராத்தில் பூமியதிர்ச்சி இடம்பெற்று ஒரு வாரத்திற்கிடையில் மீண்டும் பூமியதிர்ச்சி ஏற்படலாம் என சோதிடம் எதிர்வு கூறுவதனால் மக்கள் பயப்பீதியில் உறைந்து போயுள்ளனர்.

குஜராத்தில் எத்திசையை நோக்கினும் சடலங்கள் எரியுண்ட சிதைவுகளே காணப்படுகின்றது.

அகமதாபாத் மக்கள் தமது வீடுகளில் உறங்குவதற்கு விரும்பாமல் உறவினர்கள் அனைவரும் ஒன்றாகவே இருப்பது அல்லது ஒன்றாகவே சாவது என முடிவு எடுத்துள்ளோம் எனவும் கூறுகின்றனர்.

உயரமான கட்டடங்களில் வசிக்கும் மக்கள் அனைவரும் தமதுஇருப்பிடங்களை விட்டு முற்றாகவெளியேறியுள்ளார்கள்.

(செ)

## உலக தரிசனம்

# போட்டியில் பங்குபற்ற இந்திய அரசு அனுமதி

(புதுடில்லி)

சார்ஜாவில் நடைபெறவுள்ள சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட் போட்டித் தொடரில், இந்தியக்கிரிக்கெட் அணி கலந்து கொள்வதற்கான அனுமதியை இந்திய அரசாங்கம் வழங்கியுள்ளது.

குஜராத்தில் இடம்பெற்ற பூமியதிர்ச்சியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிவழங்குவதற்காக நடத்தப்படும் இம் முன்னணிக் கிரிக்கெட் தொடரில் கலந்து கொள்வதற்கான அனுமதியை இந்தியக் கிரிக்கெட் அணி அரசாங்கத்தைக் கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

எதிர் வரும் 8 ஆம் திகதி சார்ஜாவில் ஆரம்பமாகவுள்ள இப் போட்டியில் இந்திய அணியுடன், பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய அணிகள் மோதவுள்ளன.

(செ)

# சச்சின்;மாதுரி தீட்சித் மும்முரமாக நிதி சேகரிப்பு

(புதுடில்லி)

பிரபல கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்கர், ஹிந்தி நடிகை மாதுரி தீட்சித ஆகியோர் குஜராத் மக்களுக்கு நிதி சேகர்ப்பதில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

யார் கோடிஸ்வரராகரை விரும்புகிறார் என்னும் தொலைக்காட்சிப் போட்டி நிகழ்ச்சியில் கலந்து கொண்டு வெற்றியீட்டுடவர் தமக்கு கிடைக்கும் நிதியினை பூகம்பத்தில் பாதிக்கப்பட்டோரின் நிவாரண உதவிக்கு வழங்கி வருகிறார்கள்.

(செ)

# ஆயுட்காலம் முழுவதும் நண்பனாக வேண்டும்

## பில்கிளின்டன் தெரிவிப்பு

(வாஷிங்கடன்)

பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயரும் நானும் ஆயுட்காலம் முழுவதும் நண்பர்களாக இருப்பதற்கு விரும்புகின்றோம். என முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டன் தெரிவித்துள்ளார்.

உலகில் உள்ள முன்னணித் தலைவர்களில் ஒருவரான ரொனிபிளேயர் பல நெருக்கடியான சந்தர்ப்பங்களில் தன்னுடன் இணைந்து செயற்பட்டுள்ளார் எனவும்,

கடந்த வருடம் பிரிட்டனில் பிளேயர் தம்பதியினருடன் வசித்த காலப்பகுதி மிகவும் அற்புதமானது எனவும் தெரிவித்துள்ளார்.

(செ)

# ஆபத்தின் போது உயிர்காத்த நாய்

(புதுடில்லி)

குஜராத் மாநிலத்தில் ஏற்பட்ட பூமியதிர்ச்சியின் போது இடிபாடுகளுள் சிக்குண்ட தனது எஜமானியையும் இருமகன் மாரையும் அவர்களது நாய் காப்பாற்றியுள்ளது.

குச்பகுதியிலுள்ள வங்கி ஊழியர் ஒருவரின் மனைவியும் மகன் மார்களுமே இவ்வாறு காப்பாற்றப்பட்டவர்களாவர்.

சம்பவம் நடைபெற்ற போது வங்கி ஊழியர் வீட்டில் இல்லாத காரணத்தால் தனது இருப்பிடத்தை அறிய முடியாது தத்தளித்த போது அவரது செல்லப்பிராணியான ரொக்கி என்ற நாய் குரைத்துக்குரைத்து எஜமானியும் பிள்ளைகளும் அகப்பட்டிருந்த இடத்தை அடையாளம் காட்டியது.

இதனையடுத்து இவ் வங்கி ஊழியர் மற்றையவர்களின் உதவியுடன் இடிபாடுகளுள் சிக்குண்டு மயக்க நிலையில் இருந்த மனைவியையும் இரு மகன்மாரையும் வைத்தியசாலையில் அனுமதித்தார்.

இருந்த போதும் இருபபண்களை அவரால் காப்பாற்ற முடியாது போய்விட்டது.

(செ)

## செய்திப்பரல்

★ விமானக் குண்டுத் தாக்குதல் குற்றத்திலலிபியர் ஒருவர் தண்டனை பெற்றதையடுத்து லிபியா அமெரிக்காவுடனும் பிரித்தானியாவுடனும் உறவு கொள்ள விரும்புகிறது.

★ அமெரிக்க வெளியுறவுக் கொள்கையில் ஐரோப்பிய நாடுகள் முக்கிய இடம்பெறும் என்று புதிய ஜனாதிபதி புஷ் தெரிவித்தார்.

★ தாய்லாந்தில் நடந்த தேர்தல் மூலம் மூன்று கட்சிகள் இணைந்து ஆட்சி நடத்த உள்ளன.

★ ஹெலிக்கொப்டர் உதிரிப்பாகங்களை இந்தியாவிற்கும் தடையை அமெரிக்கா நீக்கியுள்ளது.

★ தாய்வான் சீனாவுடன் மீண்டும் வர்த்தகம் செய்வதற்காகக் குழுவொன்றை அனுப்பியுள்ளது.

★ குஜராத் நிலநடுக்க சேரழிவுகளைச் சமப்படுத்த சில வரிகளைக் கூட்ட இருப்பதாகவும் சில வரிகளைக் குறைக்க இருப்பதாகவும் வாஜ்பாய் தெரிவித்துள்ளார்

★ இந்தியா ஐ நா பாதுகாப்பு சபையில் நிரந்தர அங்கத்துவம்பெறும் வரை பிரான்ஸ் ஆதரிக்கும்.

குஜராத் பூமியதிர்ச்சியின்போது

# காலனின் பிடியிலிருந்து தப்பிய 102வயது மூதாட்டி

(புதுடில்லி)

குஜராத்தில் அண்மையில் நடந்த நில நடுக்கம் காரணமாக ஏற்பட்ட பேரழிவுகளின் மத்தியிலும் 102 வயதுப் மூதாட்டி ஒருவர்உயிர்காக்கப் பட்டுள்ளார்.

மிகமோசமாக பாதிக்கப்பட்ட புஜ்நகரில் கட்டிடஇடிபாடுகளுக்குள் இருந்து வேஜிபென் (102வயது) என்ற மூதாட்டியே உயிருடன் மீட்கப் பட்டவராவார்.

தற்போது வேஜிபென் அதிர்ச்சி அடைந்த நிலையில் உள்ளார் எனவும் மூச்சுவிட சஷ்டப்படுகிறார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. பூகம்பம் ஏற்பட்டு ஆறு தினங்களின் பின் இவர் மீட்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, 13 வயது நிரம்பிய பிரியங்கா என்ற சிறுமி கட்டிட இடிபாடுகளுக்குள்ளிலிருந்து காயங்கள் எதுவுமின்றி காப்பாற்றப்பட்டுள்ளார்.

(ந)

# இசைத்துறையில் மூவர் சாதனை

(சிங்கப்பூர்)

இசைக்கலைஞர்கள் மூவர் தங்களுக்கும் சிங்கப்பூருக்கும் பெருமை தேடும் வகையில் தொடர்ச்சியாக இருபத்திரண்டு மணித்தியாலம் இசைக்கருவிகளை மீட்டு புதிய சாதனையை ஏற்படுத்தியுள்ளனர்.

எஸ். செல்வபாண்டியன் எஸ். பாஸ்கரன் நடராசா ஆகியோர் இணைந்து வாத்தியங்களில் இசைத்து சாதனையை நிலை நாட்டியுள்ளனர்.

பல நாட்டு இசை வடிவங்களை இந்தத் தொடரில் இசைந்துள்ளனர். பல நாட் பயிற்சியின் பின்னரே இதனை சாதித்துள்ளனர்.

(செ-து)

# மலேசியக் கடலில் மிதக்கும் சடலங்கள்

(கோலாலம்பூர்)

மலேசியாவின் மேற்குக் கடலுக்கு அப்பால் நான்கு இந்தோனேஷியர்கள் மூழ்கி இறந்ததாகத் தெரிவிக்கப் படுகிறது.

மலேசிய கடற்படை அதிகாரிகள் இந்தநான்கு சடலங்களைக் கண்டு மீட்டதாகவும் அத்துடன் கவிழ்ந்தநிலையில் படகு ஒன்றையும் மீட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக மலேசிய கடற்படைஅதிகாரிகள் கருத்துத் தெரிவிக்கையில் கள்ளக் குடியேற்ற இந்தோனேஷியர்கள் இப்படி நாட்டிற்குள் நுழைய முற்படுவதாகவும் அவர்களில் ஒரு தொகுதியின் படகு மூழ்கையில்சிக்கியிருக்கிறார்களென்றும் இவர்களுடன் வந்தவர்களில் இன்னும் சிலர் மாண்டிருக்கலாமென்றும் கருத்துத் தெரிவித்தனர்.

(து)

## பங்களாதேஷ் ஸ்தம்பிதம்

[டாக்கா]

பங்களாதேஸில் அண்மையில்ஏற்பட்ட பொது வேலை நிறுத்தம் காரணமாக நாடே ஸ்தம்பிதமடைந்திருந்தது.

கம்யூனிஷ்ட் கூட்டம் ஒன்றில் ஆறுபேர் கொல்லப்பட்டதை ஆட்சேபித்தே இப் பொதுவேலை நிறுத்தம் மேற்கொள்ளப் பட்டதாகத் தெரிவிக்கப் படுகிறது [செ]

# சர்வதேச மயமாக்கலை எதிர்த்து பலத்த ஆர்ப்பாட்டம்

(இலண்டன்)

சுவிற்சர்லாந்தில் நடைபெற்றுவரும் உலகப் பொருளாதார சம்மேளனத்தின் மகாநாட்டிற்கு எதிர்புத் தெரிவித்து சுவிற்சர்லாந்தின் பல பாகங்களிலும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

இம்மகாநாட்டில் உரையாற்றிய தென்னாபிரிக்க ஜனாதிபதி பெகி சர்வதேச மயமாக்கல் காரணமாக உலகம் இரண்டாகப் பிளவு பட்டுள்ளது. இதன் காரணமாக உலகின் ஒருபாகத்தில் வறியவர்களும், மறுபக்கத்தில் செல்வந்தர்களும் காணப்படுகின்றனர் எனவும்,

இச்சர்வதேச மயமாக்கல் காரணமாக ஆபிரிக்காவின் பல நாடுகள் வறுமையில் சிக்குண்டு இருப்பதும் இந்தோனேசியா பலத்த பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகி இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

இச் சர்வதேச மயமாக்கலினால் 3 ஆம் உலக நாடுகள் பெரும் பாதிப்பிற்குள்ளாகும். இதனால் கடும் எதிர்ப்பினை சந்திக்க வேண்டியும் ஏற்படும் என சர்வதேச வர்த்தகத் தலைவர்களுக்கு ஐ.நா. பொதுச் செயலர் கோபி அனான் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இச் சர்வதேச மயமாக்கல் காரணமாக சர்வதேச அளவில் தீர்மானங்களை எடுப்பதில் காணப்படும் சமமின்மையும், பயனின்மையும் இறுதியில் மோதல்களுக்கு வழிவகுப்பதுடன் சர்வதேச பொருளாதாரத்திலும் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தும்.

உலக பொருளாதார சம்மேளனத்திற்கு எதிராக இடம்பெறும் ஆர்ப்பாட்டங்களை அடக்குவதில் பொலிஸார் மும்முரமாக ஈடுபட்ட போதும் கடுமையான ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றது.

(செ)

# மே. இந் அணி வெற்றி

மேற்கிந்தியத் தீவுகள் சிம்பாவே அணிகளுக்கிடையில் நேற்று முன்தினம் நடைபெற்ற சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தொடரில் மேற்கிந்தியத் தீவுகள் 44 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இதன்படி முன்னணிக் கிரிக்கெட் போட்டித் தொடரின் இறுதிப் போட்டியில் அவுஸ்திரேலிய அணியுடன் கலந்து கொள்வதற்கு மேற்கு இந்திய தீவுகள் அணி தெரிவாகியுள்ளது.

(செ)

ஒளி ஒருவற்கு உள்ள வெறுக்கை இளி ஒருவற்கு அஃது இறந்தும் வாழ்தும் எனல்

குறள்

## வலம்புரி

### தமிழுக்கு மணிவிழா

பேராசிரியர் சண்முகதாஸ் அவர்களுக்கு தமிழ் கூறும் நல்லுலகு இன்று மணிவிழா எடுத்து இனிமை காண்கிறது .தமிழால் தன்னையும் தன்னால் தமிழையும் வளர்த்தவர் பேராசிரியர் சண்முகதாஸ் எளிமையான வாழ்வும். ஏழைச்சிறுவர்களின் சிரிப்பில் - அவர் தம் உயிர்ப்பில் மகிழ்வு காணும் மனோநிலையும் பேராசிரியரின் மணிவிழாவிற்கு பெருமை சேர்க்கும் இரு பெரும் மகுடங்களாகும.

புத்திஜீவிகள் வட புலத்து மண்ணிலிருந்து புலம் பெயரும் இக்கால கட்டத்தில் - பேராசிரியர் சண்முகதாஸும் அவர் தம் பாரியார் திருமதி மனோன்மணி சண்முகதாஸும் இம்மண்ணிலிருந்து தமிழ்ப்பணி-கல்விப்பணிக்கு ஆற்றும் சேவை எஞ்ஞான்றும் பாராட்டுக்குரியது - அது மட்டுமன்றி திருநெல்வேலி சைவச் சிறுவர் இல்லத்தின் தலைவராக இருந்து ஏழைச் சிறார்களுக்கு ஆற்றும் பணியால், நம்மையும் இம்மண்ணில் அரவணைக்கும் அன்புக் கரம் உண்டு என்ற நம்பிக்கை அவ்ஏழைச் சிறுவர்களின் உள்ளத்தில் குடி கொண்டுள்ளது.

ஏழைக் குழந்தைகள், சிறுவர்களின் ஏற்றமிகு வாழ்வில் எவர் அக்கறையுடையவர்களாக இருக்கிறார்களோ, எவர் அவர்களுக்காகப் பணி செய்கிறார்களோ அவர்களே இறைவனுக்கு பணி செய்கிறார்கள்.

அத்தகைய உயர்மிகு சேவையை பேராசிரியர் சண்முகதாஸ் அவர்கள்

---

#### பரமபிதாகாட்டிய பாதை

# தன்னம்பிக்கையுடன், இறை நம்பிக்கை சேரில்

# இவ்வுலக வாழ்வில் முழுவளர்ச்சி ஏற்படும்



மனிதன் நாளுக்கு நாள் முன்னேறிச் செல்கின்றான் என்றால் அதற்குக் காரணம் நம்பிக்கை, நாளைய நாள் விடியும். நாம் உயிருடன் இருப்போம். பணிகளைத் தொடர்வோம் என்ற நம்பிக்கையுடனேயே செயற்படுகின்றோம். மனித வாழ்க்கையில் ஒவ்வொரு நகர்வுகளும் நம்பிக்கையின் படிக்கற்களே யாகும் இருந்தபோதும் தன் நம்பிக்கையுடன் இறைநம்பிக்கையும் இணையும் போதே முழுமையானவளர்ச்சிக்கு வழிபிறக்கும். ஆனால் இன்று ஆயுதக் கலாச்சாரமும் பணமும் ஆன்மீகத்துக்குச் சவால் விடுக்கின்றதை நாம் கண்கூடாகக் காண்கின்றோம். நீதி. நேர்மை தொலைவில் நின்று பார்ப்பதையும், அன்பு, அகிம்சை அருகி வருவதும் புதியமில்லேனியத்தின்வளர்ச்சியாகக் கருதப்படுகிறது.

**நம்பிக்கையற்ற நிலை**

வருங்கால வாரிசுகளை உலகிற்கு பெற்றுத்தரும் தாய்மை களங்கப்படுத்தப் படுகிறது. திருமணம் என்ற புனித உறவு தெருவீதித் தீர்ப்புக்கு உள்ளாக்கப் படுகின்றது. வன்முறைத் தனமான செயல்கள் சொந்தக் காரர்களையே விரகதியின் விளிம்புக்கு ஆளாக்கியுள்ளது. இதன் நடுவே நாம் என்னசெய்ய முடியும் என்று நல்ல உள்ளங்களின் செயற்பாடும் இடைநடுவில் விடப்பட்டு நாம் நம்பிக்கையற்றவர்களின் வாரிசுகளாக வளர்ந்து வருகின்றோம். முன்னெடுப்புக்கள் பின் தள்ளப்படுகின்றன.

**நம்பிக்கை நலனளிக்கும்**

எமது விசுவாசத்தின் (நம்பிக்கையின்) இது பெரும் சொத்தாக விளங்குபவர் பிதாட்பிதாவானஆபிராகம். அவருடைய வழி இறைவனின் திட்டம் இஸ்ராயேலர் மூலமாக கிறிஸ்துவிலே விசுவாசம் கொள்பவர்களுக்கு அளிக்கப்பட்டு வருகின்றது கிறிஸ்து உயிர்க்கவில்லையென்றால் நாம் நம்பிக்கை கொள்வது பொய்யான செயலாகும் என்று புனித பவுல் கூறுகின்றார். இயேசுவும் நம்பிக்கை கொண்டோர்களையே குணமாக்கினார்.

## திருமதி எம். பெனிக்னாபிலிப்

ஆசிரியை

உனது நம்பிக்கை உன்னைக் குணமாக்கிறது என்று இயேசு கூறி நோயாளரைக் குணமாக்குகின்றார். ஆதிக்கிறிஸ்தவ குழுமத்தின் வாழ்வும் நம்பிக்கை அடிப்படையில் கட்டப்பட்டதாக இருந்ததை நாம் காண்கின்றோம். இயேசு தமது சீடரின் நம்பிக்கையை அறிந்து கொள்ள ''ஆழத்திற்குப் படகுகளைத் தள்ளிச் சென்று வலைகளைப் போடுங்கள்,, என்றார். அவர்களும் அவ்வாறு செய்து இறைவல்லமையின் மகிமையைக் கண்டு கொண்டார்கள் என்பதை நற்செய்தி எடுத்து இயம்புகின்றது.

**நம்பிக்கையே கேடயம்**

போர் முழக்கத்தின் வன்முறையின் பிடியிலிருந்து நாம் வாழவேண்டும் என்றால் நம்பிக்கை என்ற கேடயத்தை எமக்குப் பாதுகாப்பாகவும், வழித்துணையாகவும் வைத்துக் கொள்ள வேண்டும். எம்மை எதிர்த்து வரும் சவால்களுக்கு முகங்கொடுக்க அக்கேடயம் தான் எமக்கு உதவும். வாழ்வுச் சக்கரம் நாளும் நகர்ந்து கொண்டு இருக்கின்றது. அவ நம்பிக்கை ஊட்டும் செயல்களும் பெருகிக்கொண்டிருக்கின்றன. இவ்வேளையில் தான் நல்மனங் கொண்டவர்களும், உதவுகரங்களும்,முன் மாதிரியான செயல்களால் சமுதாயத்துக்கு நம்பிக்கை ஊட்ட வேண்டும் நாடுகாண விளையும் சான்றோர்களை உருவாக்க முனைபுடன் செயற்பட வேண்டும். அப்போதே எமது நம்பிக்கையின் ஒளிக்கீற்றுக்கள் பிரகாசிககத் தொடங்கும்,

---

#### சோதிடபலன்

# மனிதனின் குண இயல்புகளை அப்பட்டமாக

# வெளிக்கொணரும் எண் சோதிடக் கலை

(சென்றவார தொடர்ச்சி)

**பிறந்த எண் 6 - விதிஎண் 1**

இவர்கள் இருப்பு, வாகனங்கள் தொழிலில் ஈடுபட்டுச் சிறக்கலாம். மற்றும் ஆடம்பரப் பொருள், ஒப்பந்த வேலைகளும் இவர்களுக்குப் பொருந்தும். அல்லது இவை சம்பந்தப்பட்ட இடங்களில் வேலைக்குச் சேர்ந்தும் முன்னேறலாம. லாம்.

**பிறந்த எண் 6- விதிஎண் 5**

இவர்களுக்கு இரும்பு, வாகனம், கமிஷன் ஒப்பந்தத் தொழில்கள் மிகவும் பொருந்தும். மற்றும் அழகுசாதனப் பொருள்கள் தொழிலிலும் ஈடுபட்டு முன்னேறலாம். அல்லது இது சம்பந்தப்பட்ட இடங்களில் வேலைக்கமர்ந்து செல்வராகலாம். பொருந்தும் அல்லது இந்தத் தொழில்கள் சம்பந்தப்பட்ட இடங்களில் வேலைக் கமர்ந்தும் பொருள் ஈட்டலாம்.

## பேராசிரியர் என். சாமி

**பிறந்த எண் 6-விதி எண் 7**

இவர்கள் எழுத்தாலும், பேச்சாலும் பெரும் பொருள் ஈட்டுவர் மற்றும் ஐவுளி, ஆடம்பரப் பொருள்கள், வாகனத் தொழில்களும் இவர்களுக்குப் பொருந்தும். அல்லது இவை சம்பந்தப்பட்ட இடங்களில் வேலை

பந்த வேலைகள் கமிஷன் தொழில்கள் மிகவும் பொருந்தும், மற்றும் நெருப்பு சம்பந்தப்பட்ட அனைத்துத் தொழிலும் சிறந்தவையே அல்லது இவை சம்பந்தப்பட்ட இடங்களில் உத்தியோகத்துக்கமர்ந்து செல்வம் சேர்க்கலாம்.

**பிறந்த எண் 6-விதி எண் 9**

இவர்கள் அழகு சாதனப் பொருள்கள், ஆடம்பரப் பொருள்கள் சம்பந்தமான தொழில்களில் ஈடுபடலாம், மற்றும் ஒப்பந்த வேலைகள்,

களுக்காகப் பணி செய்கிறார்களோ அவர்களே இறைவனுக்கு பணி செய்கிறார்கள்.

அத்தகைய உயர்மிகு சேவையை பேராசிரியர் சண்முகதாஸ் அவர்கள் ஆற்றி வருகிறார் எனில் அதனை இவ்வையகம் என்றும் மறவாதென்பதுடன் காலத்தால் செய்த அப்பெரும் கைங்கரியம் மலரும் மண்மீட்பில் நிச்சயம் பேசப்படும் - எழுதப்படும் வரலாறாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

நலிவுற்று - நாலாபக்கமும் சிதைவுற்று நம் தமிழினம் விடிவுக்காக ஏங்கும் இவ்வேளையில், பேராசிரியர்சண்முகதாஸ் திருமதி சண்முகதாஸ் போன்றோர் இம் மண்ணிலிருந்து சேவையாற்றுவதனால் மனம் நிறைவடைகிறது. தமிழ் மணம் கமழ்கிறது. தமிழ் தேசியத்தின் பாரம்பரியம் உயிர் வாழ்கிறதுஎன்றால் அது மிகையில்லை. தமிழுக்காய் தன்னை அர்ப்பணித்துப்பணியாற்றும் பேராசிரியர் சண்முகதாஸுக்கு எடுக்கும் மணிவிழா, உண்மையில் தமிழுக்கு எடுக்கும் மணிவிழாவாகவே அமையும்.

---

## பேராசிரியர் என். சாமி

பொருந்தும். அல்லது இவை சம்பந்தப்பட்ட இடங்களில் வேலைக்குச் சேர்ந்தும் முன்னேறலாம.

### பிறந்த எண் 6- விதிஎண் 2

இவர்களுக்கு ஆடம்பரப் பொருட்கள், ஆபரணங்கள், கமிஷன், ஒப்பந்த வேலைகள் எல்லாம் பொருந்தும், பச்சை நிறப் பொருளகள் விற்பனையில்மிகுந்தலாபம் பெறலாம். அல்லது இந்தத் தொழில்கள் சம்பந்தப்பட்ட இடங்களில் வேலைக்கமர்ந்து பெரும் பொருளீட்டலாம்.

### பிறந்த எண் 6- விதிஎண் 3

இவர்களுக்கு ஜவுளி வியாபாரம் மிகவும் பொருந்தும், மற்றும் ஆடம்பரப் பொருட்கள் கமிஷன் ஏஜெண்ட், கலைகள் சம்பந்தமான தொழில்கள் மூலமாகவும் நல்ல பொருள் ஈட்டலாம் அல்லது இவை சம்பந்தமான தொழிற்சாலையில் அலுவல் பர்ர்ப்பதாலும் செல்வராகலாம்.

### பிறந்த எண் 6- விதி எண் 4

இவர்கள் போக்குவரத்து சேவை, வாகனம், ஒப்பந்த வேலைகளில் ஈடுபடலாம். பேரம்பேசுவதாலும்பொருள் ஈட்டுவர். அழகு சாதனங்கள் விற்பனை செய்வதாலும் நல்ல இலாபம் இடைக்கும். அல்லது இவைசம்பந்தப்பட்ட இடத்தில் உத்தியோகத்தில் அமர்ந்து செல்வம் சேர்க்க ஈடுபட்டு முன்னேறலாம். அல்லது இது சம்பந்தப்பட்ட இடங்களில் வேலைக்கமர்ந்து செல்வராகலாம்.

### பிறந்த எண் 6-விதி எண் 6

இவர்கள் இரும்பு, ஜவுளி, மருந்து போன்ற தொழில்களில் ஈடுபடலாம். மற்றும் ஆபரணத் தொழில், அழகு சாதனப் பொருள்களும் பேச்சாலும் பெரும் பொருள் ஈட்டுவர் மற்றும் ஜவுளி, ஆடம்பரப் பொருள்கள், வாகனத் தொழில்களும் இவர்களுக்குப் பொருந்தும். அல்லது இவை சம்பந்தப்பட்ட இடங்களில் வேலை பார்த்தும் பொருள் ஈட்டலாம்.

### பிறந்த எண் 6 விதி எண் 8

இவர்களுக்கு ஆடம்பரப் பொருள்கள் இரும்பு, ஒப்

### பிறந்த எண் 6-விதி எண் 9

இவர்கள் அழகு சாதனப் பொருள்கள், ஆடம்பரப் பொருள்கள் சம்பந்தமான தொழில்களில் ஈடுபடலாம், மற்றும ஒப்பந்த வேலைகள், கமிஷன், வாகனம் சம்பந்தமான தொழில்கள் இவர்களுக்கு மிகவும் பொருந்தும் அல்லது இவை சம்பந்தப்பட்ட இடங் ளில் அலுவல் பார்த்து மேன்மையுறலாம்

(தொடரும்

---

# புலிகளை பிரிட்டன் தடை செய்தால் சமாதானத்திற்கு பங்கம் ஏற்படும்

## பேராசிரியர் இராமசாமி பிரி. தூதருக்குகடிதம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடை செய்யும் முயற்சிகளைத் தாம் வன்மையாகக் கண்டிப்பதாக மலேசியத் தமிழர்கள் சார்பில் பேராசிரியர் பீ இராமசாமி மலேசியாவிலுள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

விடுதலைப்புலிகள் அமைப்பை தடை செய்வதால் ஏற்படக் கூடிய பாதிப்புக்களை ிளக்கி எழுதியஅக்கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுளளதாவது;

தமிழீழ விடுதலைப் புலிகள் இன்று நிபந்தனையற்ற பேச்சு வார்த்தைக்கு முன்வந்திருப்பதுடன் இச்செயல் முறையை இலகுவாக்கும் விதத்தில் யுத்த நிறுத்தத்தையும் அறிவித்துள்ளனர். அதன் பின்னர் இன்றுவரைதற் பாதுகாப்புக்காகவன்றி அவர்கள் அரசுக்கு எதிராக தாக்குதலை நடத்தவில்லை.

இலங்கை அரசாங்கம் விடுதலைப் புலிகளை தடை செய்யுமாறு அழுத்தம் கொடுத்து வருவது, இதுவரை காலமும் நோர்வே அரசு அரசாங்கத்தையும் புலிகளையும் பேச்சு வார்த்தைக்கு கொண்டு வர எடுத்த முயற்சிகளை அர்த்தமற்றதாக்கிவிடும்.

மலேசியாவில் வாழும் தமிழர்களில் பெரும்பாலானோர் உழைப்பாளர் வர்க்கத்தைச் சேர்ந்தோர் அவர்கள் விடுதலைப் புலிகள் தலைமையிலான தமிழ்மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை உணர்வு பூர்வமாக ஆதரிக்கின்றனர் இது ஓர் உணர்வு பூர்வமான தார்மீக ஆதரவு ஆகும்.

புலிகள் மீது இந்தியாவும் அமெரிக்காவும் விதித்ததடை இனப்பிரச்சினைத் தீர்வுக்கு எவ்வகையிலும் உதவவில்லை அது மேலும் அழிவுகளையும் மரணத்தையுமே ஏற்படுத்தியுளது இத்தவறை பிரித்தானியாவும் செய்யுமானால் அது நோர்வேயின் சமாதன முயற்சிக்கு பங்கமாவுர், அமையும் என்று அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ)

## ★ முல்லைத்தீவு கடற் பிரதேசத்தில் கடற்படையினர் பிரங்கித் தாக்குதல்

# 4 மீனவர்களைக் காணவில்லை!

(வவுனியா)

முல்லைத்தீவுக் கடலில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர் மீது கடற்படையினர் நடத்திய பீரங்கித் தாக்குதலின் போது நான்கு மீனவர்கள் காணாமல்போய் விட்டதாக அஞ்சப்படுகிறது.

கடந்த வெள்ளிக் கிழமை நள்ளிரவு நடைபெற்ற இச் சம்பவத்தின் போது இடம் பெற்ற பீரங்கித்தாக் குதலை அடுத்து மீனவர்களால் எடுத்துச் செல்லப்பட்ட படகுகளும் மீன்பிடி உபகரணங்களும் கடலில் மூழ்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகள் ஒரு தலைப்பட்சமாகக்கடைப் பிடித்துவரும் போர் நிறுத்தம் அமுலில் உள்ள வேளையில் இத் தாக்குதல் சம்பவம்நடை பெற்றுள்ளது.

பீரங்கித்தாக்குதல்சம்பவத்தின் போதுகாணாமல் போனவர்களின் பெயர் விபரம் வருமாறு;

இரணைப்பாலையைச் சேர்ந்த மகாலிங்கம் (வயது-28) உடுத்துறையைச் சேர்ந்த சுந்தரலிங்கம் (வயது-27) ஆழியவளையைச் சேர்ந்த உதயகுமார் (வயது-31) மயிலிட்டியைச் சேர்ந்த மணிவண்ணன் (வயது-28) ஆகியோரேகாணாமல்போனவர்களாவர். (ம)

## குழந்தையை வெட்டி கொலை செய்த தாய்

[கொழும்பு]

தான் பெற்ற குழந்தையினது கழுத்தை வெட்டிக் கொலை செய்த சம்பவம் மஹரகமவிலுள்ள ஆடைத் தொழிற்சாலையொன்றில் நடைபெற்றுள்ளது.

மஹரகம ஆடைத்தொழிற்சாலை ஒன்றில் பணிபுரியும் பெண்ணொருவர் தனக்குப் பிறந்தகுழந்தையின் கழுத்தை வெட்டிக் கொலை செய்த பின்னர் பொலித்தீன் பையில் போட்டு எடுத்துச் சென்ற போது ஆடைத் தொழிற்சாலை பாதுகாப்பு உத்தியோகஸ்தர்களால் கண்டுபிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

பதுளையைச் சேர்ந்த இப்பெண் திருமணமானவரென்றும் இவருக்கு ஏற்கனவே 3 குழந்தைகள் உள்ளதெனவும் பொலிசார் விசாரணைகள் மூலம் கண்டுபிடித்துள்ளார்கள். (வ-9)

## மின்சாரம் தாக்கி இளைஞன்பலி

(யாழ்ப்பாணம்)

பாதுகாப்பற்ற விதத்தில் மின் இணைப்பை ஏற்படுத்த முற்பட்ட இளைஞரொருவர் மின்சாரம் தாக்கி பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

ஆறுகால் மடம் லோட்டஸ் வீதி பகுதியில்நேற்றுஇடம்பெற்ற இத்துயரச்சம்பவத்தில் அதேஇடத்தைச் சேர்ந்தயானந்தம் வாகிசன் (வயது 22) என்பவரே உயிரிழந்தவராவர். (இ-12-104)

## இராமகிருஷ்ண ஜெயந்தி

[நல்லூர்]

திருநெல்வேலி இராமகிருஷ்ணாலயத்தில் இம் மாதம் 25 ஆந் திகதி 'இராமகிருஷ்ண ஜெயந்தி' சிறப்பாக நடத்தப்படவுள்ளது [உ-103]

மங்கையர் மனங்களைக் கொள்ளை கொள்ளும் தங்க நகைகளைப் பெற்றுக்கொள்ள

**நியூ நகுலா ஜுவல்லறி**

74, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.

[கி-1453]

## இரண்டாவதுதடவையாக உரும்.செல்வ புரத்தில் இலைக் கஞ்சி திட்டம்

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் செல்வபுரத்தில் வட மாநில இந்துமாமன்றத்தினால் இன்று இரண்டாவது தடவையாக இலைக் கஞ்சி வழங்கும் திட்டம் இடம்பெறும்.

தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் அனுசரணையுடன் இன்று இலைக்கஞ்சி வழங்கப்படும் இதேவேளை கடந்த வாரம் யாழ் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் அனுசரணையுடன் இத்திட்டம் நடத்தப்பட்டதென்பதும் குறிப்பிடத்தக்கது. (ந)

### இருசாராரும்---

வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவ் வேண்டுகோளில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது;

நோர்வேயின் சமாதான முயற்சிகளை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளாது விட்டால் பாரிய விளைவுகள் ஏற்படும் என்றும் இதனை அரசு சந்திக்கத் தயாராக இருக்க வேண்டுமென்றும் அவர் கேட்டுள்ளார். (ம)

### அனுருத்த---

பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

நடந்த முடிந்த பொதுத் தேர்தலின் போது கட்சிக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் வகையில் அமைச்சர் ஜயரத்ன பிரசாரம் செய்தார் என கண்டறியப்பட்டதை அடுத்தே அவர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு தீர்மானிக்கப் பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. (வ)

### இன்று---

கொள்ளப்பட்டு 53 ஆண்டு'' நிறைவு: கறுப்பு பெப்ரவரி 4 ஆம் நாள் தமிழ் தேசிய இனத்தின் வாழ்வுரிமை சிங்கள பேரினவாத சக்திகளிடம் தாரைவார்க்கப்பட்ட இருண்டநாள்'' என்ற சுலோகங்கள் அடங்கிய சுவரொட்டிகள் ஆங்காங்கே ஒட்டப்பட்டிருந்தது.

தேசியக் கொடியை இன்று பல்கலைக்கழக மாணவர்கள் ஏற்ற மாட்டார்கள் எனவும் தெரியவருகிறது.

இதேவேளை யாழ்ப்பாணத்தில் உள்ள அரச நிறுவனங்களில் தேசியக் கொடியினை ஏற்றுவதற்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப் பட்டதையும் அவதானிக்க முடிந்தது. (ந-9-12)

### அரசு---

தொடர்பாக புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்துடன் ஆலோசனை நடத்துவார் என நோர்வேயின் இராஜதந்திர வட்டாரங்கள் தெவித்துள்ளன.

இது இவ்வாறிருக்க நோர்வே தூதுவர் கொழும்பில் தங்கியிருந்த காலத்தில் இரு தடவைகள் ஜனாதிபதி சந்திரிகாவையும் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்க, பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா ஆகியோரையும் தனித் தனியே சந்தித்து பேசியுள்ளார்.

இதேவேளை வெளி நாட்டு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் ரஷ்யாவில் இருந்து நேற்று நாடு திரும்பியகையுடன் நேற்றிரவு இரண்டு தடவை தூதுவரைச் சந்தித்து நீண்டநேரம் பேச்சுக்கள் நடத்தியுள்ளார். தூதுவருடனான சந்திப்பு பிரயோசனமாகஇருந்ததென வெளிநாட்டமைச்சு வட்டாரங்கள தெரிவித்துள்ளன.

நோர்வேயின் புரிந்துணர்வு யோசனைகளை அரசு ஏற்றுக் கொள்ளுமா என்றஐயப்பாட்டுடன் தூதுவர் எரிக் சோல் கொழும்பு வந்ததாகவும் பேச்சுவார்த்தைகளின் பின் அவர் தனது பணியில் முன்னேற்றம் கண்ட திருப்தியுடன் நாடு திரும்பியுள்ளதாகவும் அரசியல் ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். (வ)

### பாலசிங்கம்-, --

வுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அரசுக்கும், புலிகளுக்கும் இடையே மோதல் தவிர்ப்புக்களை யோசனைகளில் அரசு வன்னிக்கான பொருளாதார தடையை நீக்குவதென்பதிலும், புலிகள் வடக்கு-கிழக்கு உட்பட தென்னிலங்கையில் எந்தவிதமான குண்டுத்தாக்குதலையும் மேற்கொள்வதில்லை என்பதிலும் இருசாராரும் இணக்கம்கண்டுள்ளதாகவும் நோர்வே தூதரக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளைநேற்றிரவுநாடு திரும்பிய நோர்வேயின் தூதுவர் எரிக்சோல்ஹெய்ம் அன்ரன் பாலசிங்கமும். லஷ்மன் கதிர்காமரும் ஒஸ்லோவில் சந்தித்துப்பேசுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வார் எனத் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (வ

**Jaffna Technical Institute**
**Jaffna - sriLanka**

Regd. NO. 15251 T.P. 3335

# தொழிற் பயிற்சிகள்

★ **Radio, T. V. and Video Deck Repairing**

சகல இன ரேடியோ, ரீ.வி, வீடியோ டெக் மற்றும் எலக்ரோனிக் உபகரணங்கள் என்பன திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும் (காலம் 10 மாதங்கள்)

★ **Motor Rewinding and Electrical Wiring**

சகல இன மோட்டார், (F) பான் ரான்ஸ்போமர்கள் றிவைண்டிங் செய்யும் முறை மற்றும் வீட்டு மின்னிணைப்பு முறை என்பன பயிற்சியளிக்கப்படும். (காலம் 6 மாதங்கள்)

★ **Motor Cycle Mechanisam**

சகல இன மோட்டார்சைக்கிள், நீரிறைக்கும் இயந்திரம் திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும். (காலம் 5 மாதங்கள்)

★ **Air Conditioning and Refrigeration**

சகல இன குளிர்சாதனப்பெட்டி மற்றும் எயார் கொண்டிசன் திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும். (காலம் 6 மாதம்)

★ **City and Guilds of London Exam**

(1) Power (2) Electronics

புதிய பயிற்சிகள் ஆரம்பம்-

09.02.2001 (கிழமை நாட்களில்)
10.02.2001 (சனி, ஞாயிறு நாட்களில்)

**மேலதிக விவரங்களுக்கு நேரில்**

- DIRECTOR

**521 STANLEY ROAD, JAFFNA.**
(றெயில்வே கடவை அருகில்)

**NO. 7. PALALY ROAD, JAFFNA**

(கி/1454)

**ஸ்ரீ செல்வா**
(யாழ்ப்பாணம்)
வினித், சாலினி, மம்முட்டி, குஷ்பு நடித்த
**வாழ்த்துகிறேன்**
10-30 2-30
(ப: நே)
CD பிரதி
புதிய வெளியீடு
(கி/1943)

**நாகம்ஸ்**
சுன்னாகம்
அர்ஜூன் ரம்பா நடித்த
**சுதந்திரம்**
10-30, 2-30 (பு: நே)
(கி-713)

இப் பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தினரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.